உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உஅ.] பிரமோதூதஹு புரட்டாசிமீ [பகுதி-கக.

Vol. XXVIII. September-October 1930. No. 11.

ஸ்ரீ:

வெண்பாமாலையாராய்ச்சி.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ஆசிரியர்

ஸ்ரீமாந். T. N. அப்பனையங்கார் எழுதுவது.]

(சஉ0-ம்பக்கத்தொடர்ச்சி.)

இனி,

“வெட்சி,வெட்சியரவம்விரிச்சிசெலவு
வேயேபுறத்திறையூர்கொலையாகோள்
பூசன்மாற்றேபுகழ்சுரத்துய்த்தல்
தலைத்தோற்றம்மேதந்துநிறைபாதீடு
உண்டாட்டுயர்கொடைபுலனறிசிறப்பே
பிள்ளைவழக்கேபெருந்துடிநிலையே
கொற்றவைநிலையேவெறியாட்டுளப்பட
எட்டிரண்டேனைநான்கொடுதொகைஇ
வெட்சியும்வெட்சித்துறையுமாகும்”

என்னுஞ் சூத்திரம் வெட்சித்திணையும் துறையுமாமாறு உணர்த்துகின்றது. திணையென்பது ஒழுக்கம். துறையென்பது, “மக்களும் மாவும் சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதற்கு மார்க்க”மாவது என்பர் நச்சினார்க்கினியர்,

இவ் வெட்சித்திணை மன்னுறுதொழிலும் தன்னுறுதொழிலும் என இருவகையுடையதென்று இவ் வெண்பாமாலையுடையார் விளங்கக் கூறினர். பன்னிருபடலமும், "தன்னுறுதொழிலே வேந்துறுதொழி லென், றன்னவிருவகைத்தே வெட்சி" என உரைத்தது. ஆனால் தொல் காப்பியர் "வேந்துவிடுமுனைஞர்வேற்றுப்புலக்களவின், ஆதந்தோம்பல் மேவற்றாகும்" என்றேகூறி விடுத்தார். அவ்விடத்து உரையாசிரிய ருரை பின்வருமாறு கூறிச்செல்லும்.

அது, "பன்னிருபடலத்துள் 'தன்னுறுதொழிலேவேந்துறுதொழி லென், றன்னவிருவகைத்தேவெட்சி' என இரண்டுகூறுபடக் கூறினு ராயினும், முன்வருகின்ற வஞ்சி உழிஞை தும்பை முதலாயின எடுத் துச்செலவு எயில்காத்தல் போர்செய்தல் என்பன அரசர்மேல் இயன்று வருதலின் வேந்துறுதொழிலொழித்துத் தன்னுறுதொழிலெனத் தன் னாட்டும் பிறர்நாட்டும் களவின் ஆநிரைகோடலின் இவர் அரசது ஆணை யை நீங்கினாரவர். ஆதலால் அவர் அவ்வாறுகூறல் மிகைபடக் கூற லாம். அதனுல் பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பிய னுர் கூறினுரென்றல் பொருந்தாது ...."என்பதாம்.

பன்னிருபடல ஆசிரியருள் தொல்காப்பியரும் ஒருவரென்பதை ஆன்றோர் பலரும் ஆதரிக்கின்றனர். ஆயினும் இவ்வுரை அதனை மறுக் கத் தலைப்பட்டது. ஆகலின் இதன் வன்மை மென்மையைச் சிறிது ஊன்றிநோக்கல் வேண்டும்.

வெட்சித்திணையைப் பன்னிருபடலம் இருவகைப்படுத்த தொல் காப்பியம் ஒருவகையே உரைத்தமை இக்கூற்றிற்கு ஆதாரமாகக்கொள் ளப்படுகிறது. தொல்காப்பியர் அதனை இருகூறுடையதாக வெளிப் படக்கூருதது உண்மையே. ஆயினும், அங்ஙனங்கொள்ளலாகாதென அவர் எவ்விடத்தும் விலக்குவிதி வகுத்தாரல்லர். ஆகையாற் பிற நூன்முடிந்தது தானுடம்படுதலாக அக்கொள்கையும் அவர் தழுவிக் கொண்டதே யென்னிற் படும் இழுக்கென்னை?

இதற்கு உத்தரமாக இளம்பூரணருரை கூறுவன இரண்டு. முன் வரும் எடுத்துச்செலவு, எயில்காத்தல், போர்செய்தல் என்பன அரசர் மேல் இயன்றுவருதலின் இந்நிரைகோடலும் அங்ஙனமாகவேண்டுமென் பது ஒன்று. மற்ருென்று, தன்னுறுதொழிலெனத் தன் நாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆநிரைகோடல் அரசர் ஆணையை நீங்கியதாகும் என் பது. ஆனுல் இவற்றிற்கு ஏற்ற சமாதானம் எளிதாக உரைக்கத்தகும்.

தன்னுறுதொழில் மன்னுறுதொழில் என்பவற்றை ஏற்புழிக் கோடலாக வேண்டுமிடத்தெல்லாம் கொள்ளலாம். ஆகையால் அங்ங னம் ஏற்றபெற்றி கொள்ளற்கு முதற்றிணையாய வெட்சிக்கண் அவற்றை வேருக வகுத்தது குற்றமாகாது. அன்றியும் தன்னுறுதொழில் செய் வார் அரசராணையின் நீங்கினுருமல்லர். ஏனெனில், அவர்தம் நாட்டு ஆநிரைகவர்தல் எஞ்ஞான்றுமின்றி, தம்மரசர்க்கு மாற்ருரது வேற்றுப் புலத்தினே அது செய்வாராகலின் என்பது. தம் நாட்டகத்துக் களவு காண்டல் ஆணையிற்றிரம்பிய கண்மாருடவர் கருமமாமன்றி, வெட்சிவீர ரெனப் பெயர்புனைந்தாரெவரும் கனவினும் அதனைக் கருதாரென்பது வெளிப்படை. அரசாணை நிகழாதெனினும், அது பிழையாவாறு அவர்கருத்தொடுபட்டு மறவன்தானே தொழில்செய்தலின் இது தன் னுறுதொழிலாயிற் றன்றிவேறன்று.

அவ்வாருயின் இரண்டும் மன்னுறுதொழிலெனவே பட்டு ஒன்ரு யடங்குமெனின்; அங்ஙனமன்று. அவை இரண்டற்கும் வேறுபா டுண்டு. தன்னுறுதொழில் மறவன் தானுகவே நிகழ்த்துவது. அதில் தொழில்நிகழ்ச்சி சிறிதளவேயாகும். அதனுலுறுபயனும் அவன்ருனே அடையக்கடவன். மன்னுறுதொழில் இவ்வாறன்று. அது வேந்தனது ஏவுதலாகிய துணைவலியுடையது. அதில் தொழில்நிகழ்ச்சி மிகப் பேரளவினது. அதனுலுறுபயனும் அரசர்க்கே உரியதாம்.

இங்ஙனம் இரண்டன் இலக்கணமும் இனிது விளங்குதற்கே, "வென்றிவேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும் சென்றிகன்முனை ஆதந்

தன்று'' என இந்நூலாசிரியர் உரைத்திட்டார். இதனுள் 'பணிப்பின் றியும்' என்றது பணிப்புடன் மாறுகொண்டென்பதன்று; பணிப்புநிகழாவழியும் என்றவாறு. 'இகன்முனை' என்றது தம் நாட்டகத்தென்பதன்று; பகைவரது வேற்றுப்புலத்தின் என்றவாறு. 'ஆதந்தன்று' என்றது இடையூறுறுவகை பசுவினைக்கொணர்ந்து பரிந்தோம்பிக்காத்தது என்றவாறு. இவற்றால் அரசராணையின் நீங்கித் தம்நாட்டும் பிறர் நாட்டும் காவுபுரியும் கயவர்தொழில் விலக்கப்பட்டது. வெட்சி மறவன் வேந்தன்பணிப்ப இகன்முனைச்சென்று ஆதருதலினும் பணிப்பின்றிச் சென்று தந்தானாயின் அரசர்க்கு அதனாலெய்தும் மகிழ்ச்சி பெரிதென்க.

சான்றோரிலக்கியமாகிய சிலப்பதிகாரத்தினும், வேட்டுவவரியில்,

''கள்விலையாட்டிமறுப்பப்பொறாமறவன்கைவில்லேந்திப்
புள்ளும்வழிப்படரப்புல்லார்நிரைகருதிப்போகும்போலும்
புள்ளும்வழிப்படரப்புல்லார்நிரைகருதிப்போகுங்காலைக்
கொள்ளுங்கொடியெடுத்துக்கொற்றவையுங்கொடுமாமுன்செல்லும்போலும்''

எனக் காணப்படுவது இத் தன்னுறுதொழில்குறித்த கொற்றவைநிலையென்னுந்துறை. இதனை அடியார்க்குநல்லார் உரையானும் அறியலாம். இதனுள், 'கள்விலையாட்டி மறுப்ப' என்ற காரணத்தால் இது மன்னுறு தொழிலன்று தன்னுறுதொழிலேயென்பது போதரும். 'புல்லார்நிரை கருதி' என்றதனால் மறவன் தன்னாட்டகத்துக் களவுகருதாமை தேற்றமாம். அன்றியும், இவ்வேட்டுவவரியிற் குறிக்கப்பெற்ற வீரர் வேந்தனதாணை யிற்றிரம்பாதொழுகுதல்,

''மறைமுதுமுதல்வன்பின்னர்மேய
பொறையுயர்பொதியிற்பொருப்பன்பிறர்நாட்டுக்
கட்சியுங்கரந்தையும்பாழ்பட
வெட்சிசூடுகவிறல்வெய்யோனே.''

என்று பாண்டியன் வெற்றிபெறுவானாக அவர் கொற்றவைக்குப் பராவுக் கடன்பூண்டமையான் விளங்கும். பெரும்பாணாற்றுப்படையினும்,

''புலிப்போத்தன்னபுல்லணற்காளை
செந்நாயன்னகருவிற்சுற்றமொடு

கோளாமன்னர்கடிபுலம்புக்கு
நாளாதந்துநறவுநொடைதொலைச்சி"

எனத் தன்னுறுதொழில் குறிக்கப்பட்டதாம். ஆகவே இங்ஙனமாய இலக்கியங்கட்கு இலக்கணமின்றி ஒழியாவாறு வெட்சித்திணையினை இருவகையாக்கோடல் மிகுதியும் தகுதியுடைத்தென்க.

இக்கருத்தினை நன்குணர்ந்தே நச்சினார்க்கினியரும், "வேந்துவிடு முனைஞர்" என்னும் அத் தொல்காப்பியச் சூத்திரத்து, உரையாசிரியர் கொள்கையை விடுத்து வேறுவகையாகப் பொருளெழுதினர். அது வருமாறு:—"வேந்துவிடுவினைஞர் என்னாது முனைஞர் என்றதனானே முனைப்புலங்காத்திருந்தோர் தாமேசென்று நிரைகோடலும், குறுநில மன்னர் நிரைகோடலும், ஏனை மறவர் நிரைகோடலுமாகிய வேத்திய லல்லாத பொதுவியலுங்கொள்க" என்பதாம்.

இங்கு வேத்தியலென்றும் பொதுவியலென்றும் வழங்குவன முறையே வேந்துறுதொழில் தன்னுறுதொழில் என்பவற்றைக் குறிப் பன. முனைஞர் அல்லது முனைப்புலங்காத்திருந்தோர் என்றது வெட்சி வீரரைக் குறிக்கும். இதனால் அவர்மாற்றாரோடு போர்தொடுத்தற்கு அரசனாணையால் எல்லைப்புறக்காவலில் அமர்ந்திருப்பவர் என்பது புலப் படும். ஈண்டுக் குறித்த வேத்தியல் பொதுவியல் என்ற இருவகையிய லும் காந்தைக்கும் ஏற்பனவென்றும் நச்சினார்க்கினியர் கருதுவாராயினர்.

இதுகாறுங் கூறியவற்றால் வெட்சித்திணை இருவகைப்படுதல் தொல்காப்பியர்க்கும் உடன்பாடென்ற கொள்கை வலியுறுவதோடு, பன் னிருபடலத்துத் தன்னுறுதொழில்கோடல் பிழைபடக்கூறலாகையால் அந்நூலின் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறியதன்று என்ற உரை யாசிரியர் கொள்கை நலிவுறுதலுங் காணலாம். ஆனால் இங்ஙனம் குற்ற முடையதென்று குறிப்பிட்ட உரையாசிரியருரை பிற்காலத்தார் பிறரது இடைச் செருகலென்று கூறின லென்னை? அல்லது பன்னிருபட

லத்து வெட்சிப் படலத்தையன்றி வேறெரு படலத்தைத் தொல்காப்பியர் இயற்றினுரென்ருலென்னே? இவ்விரண்டு மன்றித் தொல்காப்பிய ஆசிரியர் வேறு பன்னிருபடலத்துத் தொல்காப்பியர் வேறு என்று கொண்டால் வரும் குற்றமென்னே? என்று இங்ஙனம் சிலர் சங்கித்தல் கூடும். அவை எவ்வாருயினு மாகுக. அவற்றை யாராய்தல் மற்ருென்று விரித்தலாம். ஆகையால் ஈண்டைக்கு வேண்டுவதின்று. இது நிற்க.

இவ்வெட்சித் திணைக்கு வெட்சியரவம் முதல் வெறியாட்டீருகப் பத்தொன்பது துறைகள் ஈண்டுக்கொள்ளப்பட்டன. தொல்காப்பியம் இதற்குப் படையியங்கரவம் முதல் கொடையீருகப் பதினுன்கு துறைகளே வகுத்தது. "உட்குவரத்தோன்று மீரேழ்துறைத்தே" (புறத். சூத்தி. 1.) என்றும் "வந்தவீரேழ் வகையிற்ருகும்" (சூத்தி. 3.) என்றும் அந்நூல் இவ்வெண்ணிக்கையை இரண்டிடங்களில் வற்புறுத்தல் காணலாம். ஆகவே இங்ஙனம் இருமுறை கூறியதன் காரணம் ஆராயத் தக்கது.

அக்காரணம் இன்னதென்பதை, "பிள்ளைவழக்கு புலனறிசிறப்பு முதலாயின அத்துணைச் சிறப்பில; இத்திணைக்குரிய துறை இவையேயெனல் சுட்டப் பெயர்த்தும் ஈரேழ் வகையிற்று என்ருர்" என உரையாசிரியர் உரைத்திட்டார். ஆயினும் இவ்வுரைப்பகுதி மற்ருெருபதிப்பில் விடுபட்டுளது. ஆகவின் இஃது இடைச்செருகலோ என ஐயப்படுதலுடைத்து. எவ்வாருயினும் ஆகுக. வெட்சித்திணைக்கண் சில துறைகளை மிகுத்துக் கூறுதல் முந்தையோர் கண்டமுடிபென்பதை நினைவுறுத்தற்கு ஆசிரியர் தொல்காப்பியர் அங்ஙனங் கூறினுரென்றல் சிறிதும் வழுவாதாம்.

இனி, இச்சூத்திரத்தின் இறுதியிற்குறித்த துடிநிலை, கொற்றவை நிலை என்பவற்றைத் தொல்காப்பியர் வெட்சியின் புறன் என வேருக ஓதினர். வெறியாட்டினை அவர் "கல்லொடுபுணர்த்துச் சொல்லப்பட்ட" (சூத்தி. 5.) என்பதன் எழுமூன்று துறைகளில் ஒன்ருக முன்வைத்தார். பிறவுமன்ன.

[வெட்சியரவம்].

இனி, இத்திணையின் துறைகளுள் முதலாவது வெட்சியரவ மென்பது. பசுநிரைகவரும் வீரர் பகைப்புலத்தின் மீது செல்லவிரும்பிச் செய்யும் ஆரவாரமாகலின் இது வெட்சியரவ மெனப் பெயர்பெற்று, முதற்கண் வைக்கும் முறையுடையதாயிற்று. "ஆாதர் செல்வான் துடிபடுத்து" என இதன் வரலாற்றுச் செய்யுளில் அரவம் குறிக்கப்படுதல் அறிக. தொல்காப்பியம் இத்துறையினைப் படையியங்காவம் என வழங்கும். நிற்க.

களவினல் நிரைகொள்ளக் கருதுவார் ஆரவமின்றிச் செல்லவேண்டுமாகையால் இங்கு அவரது ஆரவாரத்தைச் சிறப்பித்தல் மிகையாம் என்பது தடை. இதற்கு விடை, எல்லோரும் ஒருவழித்தங்கி விரிச்சி பெற்றுப் போக விழைதலின் அவரையழைத்துக் காரியங்கொள்ளற்கு இவ்வாரவாரம் இன்றியமையாதென்பது. இது பகைவருணராவாறு தமக்குட் செய்யும் எழூச்சியரவமென்க.

இனி, துறையென்ற பெயர்க்காரணத்தை ஆராயின் அது பல பொருட்பகுதியுடையது என விளங்கும். ஆகையால் ஒவ்வொருதுறையும் அதனதன் உட்பகுதிகள் பலவற்றூற் பரந்துபட விரிந்துதோன்றும். அவ்வாறே இவ்விடத்தும் நிரைகொள்ள எழூம் ஆரவாரம் காரியமாக அதற்குக் காரணமாய் நிகழ்வனவெல்லாம் இவ் வெட்சியரவ மென்னுந் துறைப்பாற் சார்த்தி யுரைக்கப்படும்.

அக்காரணங்களாவன; போர்க்கு எழூம் முன்னர்ப் பூக்கோள் ஏவுதலும், படைத்தலைவரைத் தருக என்றலும், அவர் வருதலும், அவர் வந்துழி இன்னது செயல் என்றலும், அவர் வேந்தர்க்குரைத்தலும், அவர் படையைக் கூஉய் அறிவித்தலும், படைச்செருக்கும் அதைக் கண்டோர் கூறலும், அவர் பகைப் புலக் கேட்டிற்கு இரங்கிவருந்தலும்,

நாட்கோடலும், அவர் கொற்றவைக்குப் பரவுக் கடம்பூண்டலும், பிறவுமாம். இவையனைத்தும் இத்துறையினுள் அடங்குமாறு ஆசிரியர் உய்த்துணரவைத்தார்.

இவற்றுட் சில வருமாறு:—

"கடிமனைச்சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவில்வேலோன் மறுத்தோம்பல் வேட்டோன்
அடிபுனைதோலி னரண்சேர்ந்து மள்ளர்
வருகமன்வாயிற் கடை"

இது படைத்தலைவர் படையாளரைக் கூயினது.

"வாள்வலம்பெற்ற வயவேந்த னேவலால்
ஆள்வலிளையவர் தாஞ்செல்லினர்—நாளைக்
கனைகுரனல்லா அக் கன்றுள்ளப் பாலால்
நனைவதுபோலு நம்மூர்"

இது படைச் செருக்கு, கண்டோர் கூறியது.

"வந்த நிரையி னிருப்பு மணியுட
னெந்தலை நின்றலை யாக்தருதும்—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு"

இது தெய்வத்திற்குப் பராயது. பிறவும் வருவனவெல்லாம் இதனுள் அடக்குக. இவை நச்சினார்க்கினியம்.

(தொடரும்).

உ

தொல்காப்பியச் சொல்லதிகார வுரையாசிரியரும் தெய்வச்சிலையாரும்.

['இதனை முனிவரும் வந்தார் அகத்தியரும் வந்தார்' என்றாற் போலக் கொள்க.]

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு மிகப்பழைய பனையேட்டில் எழுதப்பட்ட உரையொன்று, சென்ற ஆண்டிலே தஞ்சை அரண்மனைப் புத்தகசாலையிலிருந்து தஞ்சைக் கரந்தைத் தமிழ்க்கழகத்திற்குக் கிடைத்து, அக்கழகத்துத் தமிழ்ப்பொழில் ஆசிரியர் வேங்கடாசலம் பிள்ளையவர்களால், பேராசிரியர் உரையென்று அச்சிடப்பட்டது. அவ்வுரையேட்டின் முடிவிலே 'ஆத்திரேய கோத்திரத்து' என்ற எழுத்துக்கள் காணப்பட்டு மேலுள்ள எழுத்துக்கள் சிதைந்திருந்தமையால் அக்கோத்திரத்தால் சிறந்த பேராசிரியர் என்பாரே அவ் வுரையாசிரியராதல்வேண்டும் என்னும் கருத்தால் அப்பெயருடன் வெளியாயிற்று. இப்பால் அவ்வுரையேடு ஒன்று 'தெய்வச்சிலையார் உரை, எனக் குறிக்கப்பட்டது, புலவர் தலைவர் வே. சுவாமிநாதையரவர்களிடமிருந்து கிடைத்து, அப்பொழில் ஆசிரியரால் அப்படியே அச்சிற்பதிக்கப் பெற்றது. ஆகவே, அவ்வுரையாசிரியரென்று கருதப்பட்டார் இருவருள் இன்னார்தாம் உண்மையுரையாசிரியர் என்று துணிந்துகொள்வது பெரும்பாலார்க்கு அரிதாயிருப்பதால், ஒருதலை துணிவாக இவ் வாராய்ச்சியுரை 'பொழிலாசிரியர்' விரும்பியவாறு எழுதலாயிற்று.

இவ்வுலகத்தில் வழங்கும் மொழிகள் எல்லாம், எல்லாம் வல்ல இறைவன் அருளால் தோன்றியவைகளே ஆயினும், பெறுதற்கரிய மக்கட்பிறவியில் தோன்றியவர்க்கு உறுதியென்று கொள்ளப்படும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் அரில் தப ஓதி, அவற்றை அவர் எளிதில் எய்தி, உய்யும்படிசெய்யும் முறைமையினானும், அவ்விறைவனே தானும் ஓர் புலவனெனக் கழகத்தில் வீற்றிருந்து நூல் இயற்றியும் பாக்கள் புனைந்தும் திருவிளையாடல் புரிந்த சிறப்பினானும், தமிழ்மொழி யென்பது ஒரு தனிமொழியேயாம்.

மூலபலவதையில் இராமர் கைக்கொண்ட வில்லானது ஒப்பற்றது. அந்த வில்லைக்கொண்டு அம்புகளை வழங்கிய முறைமையும் ஒப்பற்றது என்பதை ஓர் உவமையால் விளக்க எண்ணின கல்வியிற்பெரியராகிய கம்பருக்குத் தமிழ்நெறி வழக்கம் அன்றி வேறே எந்த உவமையும் கிடைக்கவில்லை யாகையால்,

'குமிழிநீர் ஓடுஞ்சோரிக் கனலொடும் கொழிக்கும் கண்ணன்
தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார்
அமிழ்பெருங் குருதிவெள்ளம் ஆற்றுவாய் முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும்வேலை ஓதம்வர் துடற்றக் கண்டான்'

எனக் களன்காண்படலத்தில் கூறினர். அதுகொண்டும் தமிழ்மொழி வழக்கும் தமிழ்மக்கள் வழக்கும் ஒப்பற்றதென அறிக.

குழவிகளுக்குத் தாய்ப்பாலின் மணம் அறுதகாலத்திலே 'அறஞ் செய விரும்பு, ஆறுவது சினம்....ஔவியம் பேசேல்' என்றுற்போலும் அறத்துப்பாலைப் புகட்டும் மொழி தமிழையன்றி வேறு யாதுளது.

இத்தகையமொழி வழங்கப்பெற்றது ஆதியிலே திருவேங்கடத் திற்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட நிலம் சேர சோழ பாண் டியர் என்னும் மும்மன்னர் ஆட்சியில் உள்ளது. திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், மாயோனும், இந் திரனும், வருணனும் கோயில்கொண்டமர்ந்தது—கங்கைநீர் ஆடினர்க் கும் குமரிநீராலன்றித் தூய்மைநேராதென்றால், அக்குமரியின் பெரு மையும் தமிழ்நாட்டின் பெருமையும் இனைத்தென அளவிடற்குரியார் யாவர்? எத்தனையோ முற்பிறவிகளில் செய்த நல்வினைப்பயனெல்லாம் திரண்டு இறைவன் அருளோடு துணைக்கூடினு லன்றி, மக்கட்பிறவி வாய்க்கப்பெற்றார்க்கும், தமிழ்நாட்டிற் பிறத்தல் வாய்க்கப்பெறுது. இக்கருத்தைஉட்கொண்டே சிறப்புப்பாயிரத்தில் 'வடவேங்கடந் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து' என்று ஆசிரியர் பனம் பாரனர் கூறியதூஉம் என்க.

தமிழ்நாடும் தமிழரசர்களும் வான்மீகராலும், வியாசராலும், காளிதாசராலும் முறையே இராமாயணத்திலும், பாரதத்திலும், இரகு

வமிசத்திலும் பாராட்டப்பட்டிருத்தல் கொண்டும் அதன்பெருமை அறிந்துகொள்க. இப்பெற்றி உணராதார் தமிழ்மொழியானது மற்றைமொழிகளின் 'எண்ணிடைப்படக் கிடப்பதாக எண்ணி' உய்யும் வகை யறியாது மாழ்குவர். அது கிடக்க, தமிழ்நாடு என்பனு ஆதியிலே மிகப்பெரியதொன்றாக இருந்தது. இப்போது கன்னியாகுமரி என்று சொல்லப்படுகிற இடமானது முற்காலத்தில் அப்பெயர்கொண்ட ஆறு ஒன்று அவ்விடத்தில் இருந்ததற்கும், அதற்குத் தெற்கே எழுநூற்றுக் காவதவளவுப் பரப்பினதாக இருந்த நாற்பத்தொன்பது நாடுகள் தமிழ்நாடுகளாக இருந்தன. ஒருகாலத்தில் கடலாற்கொள்ளப்பட்டன என்பதற்கும் அறிகுறியாக உள்ளது. இவ்வளவுபெரிய நிலத்தைக் கடல்கொண்ட வரலாறு 1800 ஆண்டுகட்கு முன் நிலையுற்ற கடைச்சங்கப்புலவராகிய நக்கீரர் இறையனார் களவியலுக்கு எழுதிய உரையிலும், இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திலும் தொல்காப்பியவுரைகளிலும் விளங்குகின்றது. இதை வலியுறுத்த அயல்நாட்டு உரைச் சான்றுகளும் உள. ஆகவே, முன்னே கடல்கொண்டொழிந்த பகுதியோடு இப்போது எஞ்சியுள்ள பகுதியையும் சேர்த்து நோக்கி, இது அக்காலத்தில் எத்துணைப்பரப்பினதாயிருத்தல் வேண்டும் என்பதையும் இதில் வழங்கும் மொழி எப்பெற்றித்தாயிருத்தல் வேண்டும் என்பதையும் ஊன்றிநோக்கின் இது நிலப்பரப்பினுலும் இணையற்ற மொழியென்பது போதரும்.

இம்மொழி ஆதியிலே வடமொழிக்கலப்பு இல்லாமலே இந்நிலத்தின் இயற்கையிலே வழங்கிவந்தது. இதைத்தான் இப்போது இயற்சொல் என்று சொல்லுவது. இதைத்தான் செந்தமிழ் என்றும் சொல்லுப, வடமொழிக்கலப்பு உண்டானதெல்லாம் குறுமுனி வடநாட்டினின்றும் தென்னுடுபோந்த பின்னரேயாம். குறுமுனியால் வடமொழியிலக்கணமும் விரவச்செய்ததுவே 'அகத்தியம்' என்னும் பெரிய நூல். இது தமிழுக்கு முதனூல் என்று பலரும் கூறுப. அது உபசாரமே, அகத்தியர் தென்றிசை புகாமுன்னமே தமிழ்மொழி இலக்கணவழக்கில் இருந்ததென்பதே அறிஞர் துணிபு. அதற்கு அவ்வகத்தியர் மாணுக்கர் ஆகிய தொல்காப்பியர், தாம் இயற்றிய 'தொல்காப்பியம்' என்னும் நூலில், முதனூலுக்கு இலக்கணம் கூறுவார் 'வினையினீங்கி விளங்கிய அறிவின்

முனைவன்கண்டது முதனூலாகும்' என்னும் சூத்திரத்திலே, முதனூல் ஆசிரியர் அகத்தியர் என்று குறிக்காமல், இறைவனென்றே குறித்ததே சான்று — எனவே தமிழுக்கு இறைவனே ஆதியிலக்கணநூல் இயற்றியருளினர் என்பதும், அதன் வழியாகவே அகத்தியமும், அகத்தியத்தின்வழியாகத் தொல்காப்பியமும் இயற்றப்பட்டனவென்பதும்தெளிந்து கொள்க. அகத்தியருக்கு இலக்கணநூல் அறிவுறுத்திய ஆசிரியர் முருகவேள் என்று புராணவழக்கு உண்மையானும் அது கொள்க. கடவுளும் நேரே இலக்கணநூல் இயற்றித் தந்தார் என்பது காட்சி அளவைக்குப் பொருந்தாதென்று வாதிப்பாரும் சிலர் உளரால்எனின், அவர் கடவுளியல்பு அறியார் எனவும், கடவுண்மாட்டு அன்புஇல்லார் எனவும்கூறி மறுக்க.

இனித் தொல்காப்பியம் என்னும் அரியநூலின் பெருமை, அது இடைச்சங்கம்தொடங்கி இன்றுகாறும் நிலைபெற்றிருத்தல்கொண்டே துணிந்துகொள்ளலாம். இது ஆதியூழியின் அந்தத்திலே இயற்றப்பட்டதென்பர் நச்சினார்க்கினியர். நக்கீரர் உரையின்படி இந்நூல்இயற்றி எண்ணாயிரம் ஆண்டுகள்ஆயின என்பது புலப்படுகின்றது. வியாசர் இப்போது வழக்கிலுள்ள நான்கு வேதங்களையும் வகுப்பதற்கு முன்னரே தொல்காப்பியம் வழங்கிவந்ததென்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஆகிய ஓர் அந்தணர் கூறுகின்றார். ஆகவே அது பாரதகாலத்துக்குப்பின்னர் வடமொழியில் இயற்றப்பட்ட பாணினீயத்துக்கு மிக முற்பட்ட காலத்தினதென்பது சொல்லவேண்டா.

மேனாட்டு உரையாளர் பெரும்பாலார் ஆதியில் மொழிகள் எல்லாம் பேச்சுவழக்கில் இருந்தன நெடுங்காலம் ஆயபின்னர் எழுத்துவழக்கில் வந்தன என்று முழங்குவாரும்உளர். அது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் ஆடை உடுக்கவும் அறியாமல் பகுத்தறிவும் இல்லாமல் இருந்த மாக்கள் தங்கப்பெற்ற தேயமொழிகளுக்குச் செல்லினும் செல்லும். அன்றி இந்நிலத்து மொழிமாட்டுச் செல்லாதென மறுக்க. எழுத்து வழக்கின் முன்னே பேச்சுவழக்குநிகழ்ந்தது என்பாரை அப்பேச்சு வழக்கை உண்டாக்கினார் யாரோ எப்படியோ எனக் கடாவியும் மறுக்க.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனத் தமிழ் மூவகைப்படும். 'முத்தமிழ்த்துறையின்முறைபோகிய உத்தமக்கவிகட் கொன்

றுணர்த்துவன்' என்னும் கம்பர் அவையடக்கத்தில் கூறியதும் காண்க. இந்த மூன்று தமிழுள் இயற்றமிழைமாத்திரம் வேறுபிரித்து ஓதுவது தோல்காப்பியம் என்னும் அருமந்த நூல். இதுவே எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்னும் மூவகைப் பகுப்பையுடைய தாய், கற்றோரால் கடத்தற்கரிதாய்க், கடலினும் பெரிதாய், விரிந்து கிடக்கின்றது. இதன் முதனூலாகிய அகத்தியமோ மூன்றுதமிழையும் விரிவாக ஓதியது என்றால், முதனூல் எவ்வளவினதாக விரிந்திருக்கும் என்று மனத்தால் அளவிட்டுப் பார்க்க. இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் இலக்கண நூல்கள் அகத்தியருடைய மாணாக்கர் வேறுசிலர் இயற்றினர் என்று அறியப்படுகிறது. ஆனால் அவற்றுள் ஒரு நூலே னும் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை. சிலப்பதிகார வுரையிலே அடியார்க்குநல்லார் அந்நூல்களில் இருந்து பல சூத்திரங்களையே மேற் கோளாகக் காட்டி அந்நூல்கள் எல்லாம் இறந்தொழிந்தன என்றார்.

இசைத்தமிழ் என்பது பண் அடைவோடு பாடுவது. தேவாரம், திருவாய்மொழி, திருப்புகழ் முதலியன இசைத்தமிழ் இலக்கியங்கள். சிலப்பதிகாரத்தைத் தவிர்த்து, நாடகத்தமிழுக்குப் பழைமையான இலக்கியங்கள் கிடையா. பிற்காலத்தில் அருணாசலக்கவிராயரால் செய்யப்பட்ட 'இராமநாடகம்' என்பது சிறந்த நாடகத்தமிழ் இலக் கியமே. அதுபோல இன்னும் சில நாடகங்களும் உள. கோவை கலம்பகம் குறவஞ்சி பள்ளு முதலியன நாடகத்தமிழ்வகையின என்பர். இயலையின்றி இசைத்தமிழும், இயலும் இசையும் இன்றி நாடகத் தமிழும் அமையாது. கட்டளைக்கலித்துறை கலிவிருத்தம் முதலாயின இசைத்தமிழின்பால. இஃது அறியார் கட்டளைக்கலித்துறை பிற் காலத்து யாப்பிலக்கணத்திற் கூறியதென்று மயங்கி, மாணிக்கவாசர் காலத்தாற் பிற்பட்டவர் என்று பிதற்றுவர்.

இனி, இப்போது வெளியிடப்பட்ட தொல்காப்பியச் சொல்லதிகார வுரையாசிரியர் பேராசிரியரோ அன்றித் தெய்வச்சிலையார் என்பார் ஒருவரோ என்று ஆராயப்புகுவாம். இதற்குமுன் தெய்வச்சிலையார் என உரையாசிரியர் ஒருவர் இருந்தார் என்பது ஒருவருக்கும் தெரியாது. தொல்காப்பிய வுரையாசிரியர்கள் என்று நம்மால் தெளியப்பட்டவர்க ளுடைய உரைகளிலே எதனிலும் தெய்வச்சிலையார் உரையென்று சுட்டி

மறுக்கப்பட்டதைக் காணும். அதனால் தெய்வச்சிலையார் என்பார் நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவர் என்பது இற்றைப் புலவர் சிலருடைய கொள்கை. உண்மை அதுவன்று என்பது மேல் உரைக்குமாற்றால் தெளிக. பேராசிரியர் என்பாரைப் பற்றித் தெரியாத புலவர் இக்காலத்தில் ஒருவரும் இரார் என்பது திண்ணம். ஆயினும் அவருடைய உரைகள் யாவை? கோட்பாடுகள் என்ன? மற்றை உரையாசிரியர் கோட்பாடுகளுக்கு மாறுபாடாக இவர் உரையில் உள்ளவை என்ன என்று ஆராய்ந்து துணிந்துகொண்டவர்கள் ஒருசிலரே. அவ் வாராய்ச்சியை முன்னேசெய்து முடித்துக்கொண்டாலன்றி, இப்போது வெளிவந்த உரையின் கோட்பாடுகளில் ஒற்றுமை வேற்றுமை தெரிந்து கொள்ள வியலாது. இரண்டு உரைகளின் கோட்பாடுகளும் ஒத்திருந்தால் இதன் உரையாசிரியர் பேராசிரியரே என்று முடிவுசெய்யலாம். அல்லாக்கால் தெய்வச்சிலையாரே என்று கொள்ளலாம்.

இனிப் பேராசிரியர் உரைகள் எனப்பட்டன யாவை யென்று ஆராய்வாம் - அவைகள் இன்னவென்று துணியப்பட்டால், அவர் பிறரொடு மாறுபடும் இடங்கள் இன்னவென்று கண்டுகொள்வது எளிதே. உண்மையில் பேராசிரியர் உரைகளாக உள்ளன சில தவறாக நச்சினார்க்கினியர் உரையென்று அச்சிற் பதிப்பிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று திருச்சிற்றம்பலக்கோவையார் உரை; ஆறுமுகநாவலரவர்களால் பதிப்பிக்கப்பட்டது. மற்றொன்று தொல்காப்பியத்தில் பொருளதிகாரவுரை தாமோதரம்பிள்ளையவர்களால் அச்சிடப்பட்டதிலே மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் மரபியல் என்னும் பிந்திய நாலு இயல்களுக்குள்ள உரைப்பகுதி. அந்தப்பதிப்பிலே முந்துற்ற ஐந்து இயல்களின் உரைமட்டுமே நச்சினார்க்கினியருடையது. இதிலே சிலருக்கு இன்னும் மயக்கம் உண்டு. ஆகலின் அதை முன்னே ஒழித்தல்வேண்டும். இவையேயன்றிக் குறுந்தொகை என்னும் நூலுக்கும் பேராசிரியர் உரை எழுதினார் என்ப. அது நமக்குக் கிடைத்திலது.

தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலுக்கு இளம்பூரணர் கல்லாடர் பேராசிரியர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் என்னும் இவர்கள் எழுதிய உரைகளே இற்றைநாள் வரையில் நமக்குக் கிடைத்தன. இப்போது வெளிவந்த உரைசிற்க, அவ்வுரைகளிலே இளம்பூரணர் உரையும்

நச்சினார்க்கினியார் உரையும் எழுத்துச்சொற்பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உள்ளது. சேனாவரையர் கல்லாடர் இவர்கள் எழுதிய உரை சொல்லதிகாரத்துக்குமட்டுமே உள்ளது. இப்போது வெளிவந்த உரையும் சொல்லதிகாரத்துக்குமட்டும் எழுதப்பட்டதாகத்தெரிகிறது. மற்றை அதிகாரங்களுக்கு அவர்கள் உரை யெழுதினதாகக் காணப்படவில்லை.

ஒழிந்த பேராசிரியர் உரையோ மேலே சொல்லப்பட்ட பொருளதிகாரத்தில் பிந்திய நாலு இயல்களுக்குக் கிடைத்த பகுதியளவே இதனையும் நச்சினார்க்கினியர் உரையென்றேகொண்டால் இழுக்கென்னையெனின், செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியர் உரையென ஒன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே அச்சிடப்பட்டது. அதனுள், சூ. 62 உரையில் நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரையைச் சுட்டி மறுத்துள்ளார். அங்ஙனம் மறுக்கப்பட்ட உரை தாமோதரனார் பதிப்புரையாக இருப்பதனால் அது பேராசிரியர் உரையென்றே துணியப்படும்.

இனிப் பேராசிரியர் உரையென்று துணிந்துகொள்ளப்பட்ட செய்யுளியல் சூ. 174 உரையிலே, 'மரபியலுள் பகுத்துச் செல்லுவாம்' என்று கூறியுள்ளார். ஆதலின் மரபியலுக்கும் பேராசிரியர் உரைசெய்துள்ளார் என்பது தேற்றம்.

> 'மங்கை நல்லவர் கண்ணுமனமும் போன்று
> எங்கும் ஓடியிடறும் சுரும்புகாள்'

என்னும் சிந்தாமணி யுரையிலே, நச்சினார்க்கினியர் தும்பிக்குச் செவியறிவு உண்டென்றும், இதனை 'நண்டும் தும்பியும் நாலறிவினவே' என்னும் ம்ரபியற் சூத்திரவுரையிலே 'வாராததனால் வந்தது முடித்தல்' என்னும் தந்திர வுத்தியால் கொள்க என்று ஆண்டு உரைகூறிப் போந்தாம் என்றும் கூறினர். 'பல்காற்பறவை கிளைசெத்தோர்க்கும்' என்னும் பெரும்பாணாற்றுப்படைப் பகுதியுரையிலும் அங்ஙனம் கூறினர்.

'எழுந்து விண்படரும் சிங்கப்பெட்டைமேல்' என்னும் சிந்தாமணி உரையிலே, 'ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை பெட்டை என்னும் பெயர்க்கொடைக்குரிய' என்னும் மரபியற் சூத்திரத்துக் 'கொடை' என்றதனால் சிங்கத்துக்கும் பெட்டை கொண்டவாறு

அறிக என்றும், 'எருமைப் பெடையொடு எமரீங்கமரும்' (கலி-முல்லை-14) என்பதன் உரையிலே, எருமைப்பெடை என்பது 'பேடையும் பெடையும்' என்னும் சூத்திரத்து நாடின் என்றதனால் அமைத்தாம் எனவும் நச்சினார்க்கினியர் கூறினார். இவையெல்லாம் தாமோதரனார் பதிப்புரையில் காணும்.

'வடவேங்கடந் தென்குமரியாயிடை' என்னும் சிறப்புப் பாயிரவுரையிலே, நச்சினார்க்கினியார், வடமொழியாளர் வழக்கைத் தழுவி ஓர் புரட்டுக்கதையைப் புகுத்தி உரைத்தார். அக்கதை பேராசிரியர்க்கு முற்பட்டவர் யாரோ ஒருவர் கட்டிவிட்டதுபோலும். அவ்வுரை வருமாறு:—"(அகத்தியனார்) தொல்காப்பியனாரை நோக்கி நீ சென்று குமரியாரை (உலோபாமுத்திரையாரை)க் கொண்டுவருக எனக் கூறினார். அவர் எம்பெருமாட்டியை எப்படிக் கொண்டு வருவேன் என்று கேட்டார். முன்னே ஆயினும் பின்னே ஆயினும் நாலுகோல் எல்லைக்கு அப்பால் நடக்கவிட்டுக் கொண்டுவருக என்று அகத்தியர் சொன்னார். அப்படியே அவர் அழைத்துவந்தார். வைகையாற்றில் இறங்கிச்செல்ல வேண்டியதாயிற்று. வெள்ளம் குமரியாரை இழுத்துக்கொண்டு ஓடியது. தொல்காப்பியனார் ஒரு மூங்கிற் கோலை முறித்து நீட்டினார். அதைப் பிடித்துக்கொண்டு குமரியார் கரையேறினார். அது குற்றம் என்று அகத்தியனார் தொல்காப்பியரைச் சுவர்க்கம் புகாப்பீர் என்று சபித்தார். யான் குற்றம் செய்யாதிருக்கச் சபித்தமையால் நீரும் சுவர்க்கம் புகாப்பீர் என்று தொல்காப்பியரும் அகத்தியனாரைச் சபித்தார்' என்பது. இந்த முழுப்புரட்டுக் கதையை யாண்டுக் கண்டெடுத்தாரோ நச்சினார்க்கினியர். இதனை யார்தாம் நம்புவர். இது, "மலடி மைந்தனும் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி, இலகுகந்தர்ப்ப நகரினில் சுத்திகை இரசதம் விலைபேசி, கலகம் ஆயினர் இடையினில் கயிற்றராக் கடித்திரு வரும்மாண்டார், அலகையாயினர்' என்னும் விவகாரத்தை ஒத்ததே. இந்தக் கதையைத் தாமோதரனார் பதிப்புரையில் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்' என்னும் சூத்திர வுரையில், வேதவழக்கோடு மாறுகொள்ளுவார் கூற்றென மறுக்கப்பட்டுள்ளது. சிவஞான முனிவரும் இவ்வாறே சிறப்புப்பாயிர விருத்தியுள் கூறினார். இது போன்ற வேத வழக்கோடும் ஆன்றோர் வழக்கோடும் மாறுகொள்ளும்

கதைகளைக் கூறினமையால் நச்சினார்க்கினியர் சமணரென்று கூறினாரும் உளர். அது கிடக்க, தாமோதரனார் பதிப்பு மரபியல் உரை பேராசிரியருடையதென்றும், நச்சினார்க்கினியர் மரபியலுரை வேறாக உள்ளது இன்னும் வெளிவரவில்லை யென்றும் துணிந்துகொள்க.

'நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்தற்குக்
கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும்' என்னும் களவியற் சூத்திரவுரையிலே, 'புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்துக்குப் பேராசிரியர் கூறிய உரையானும் உணர்க' என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். 'தெய்வம் அஞ்சல்' எனும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்துளே, 'புறஞ்சொல் மாணாக்கிளவியொடு தொகைஇச் சிறந்த பத்தும் செப்பியபொருளே' என்பதனை, ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே' என்னும் மரபியற் சூத்திரம்போல் மொழிமாற்றி உரைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இவை ஒத்திருத்தல்கொண்டு மெய்ப்பாட்டியல் உரை பேராசிரியரது என்றே துணிந்து கொள்க.

'ஒண்சுடர் கல்சேர' என்னும் கலிப்பா உரையிலே, '(பறவை குடம்பை) சேர்க்கையினாலே ஒலி அவிந்து பொய்கை பள்ளி புக்காற்போலே இருந்ததென்றது, தன்குறிப்பைத்தன்மேல் ஏற்றிக்கூறியதோர் உவம விசேடம். இஃது 'ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே' என்னும் சூத்திரத்து அடக்கினும் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.

'இருபொருளொருசொல்' என்னும் எச்சவியற் சூத்திரத்துரையிலே, குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு மழலைத்தும்பி வாய் வைத்தூத' என ஒருசொல் ஒருகால் இரண்டு பொருளை உணர்த்தல் வழுவேனும் அமைகவென அமைத்தார். இதனை உவமவியலுள், 'ஒரீஇக்கூறலும்' என்னும் சூத்திரத்துச்செய்யுட்கண் இலக்கணமாகக் கூறுமாறும் உணர்க என்றார். இவ் விரண்டுரையும் தாமோதரனார் பதிப்பு உவமவியல் உரையில் காணப்படவில்லை. ஆதலின் அது பேராசிரியர் உரையென்றும் அதற்கு நச்சினார்க்கினியர் உரைஇன்னும் வெளிவரவில்லையென்றும் அறிந்துகொள்க.

இத்துணையும் கூறியவாற்றால் தாமோதரனார் பதிப்பு மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் மரபியல் என்னும் நான்கு இயல்களின் உரையும் பேராசிரியர் உரையென்று முடிந்தவாறு அறிக.

இனிப் பேராசிரியர் மெய்ப்பாட்டியல் சூ. 19. உரையில் 'அகத்திணையியலுள் கூறினும்' எனவும்; செய்யுளியல் சூ. 191, உரையுள் 'கற்பியலுள் கூறியவாற்றான் அறிக' எனவும் கூறினர் ஆதலின் அவர் அகத்திணையியலுக்கும் கற்பியலுக்கும் உரைசெய்துள்ளார் என்பது தேற்றம். 'உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத், தள்ளாதாகும் திணையுணர் வகையே' என்னும் அகத்திணையியற் சூத்திரவுரையுள் 'பேராசிரியரும் மீனெறி தூண்டில்' என்பதனை ஏனைஉவமம் என்றார் என்று நச்சினார்க்கினியர் உரைப்பதைக்கொண்டும் அகத்திணையியலுக்குப் பேராசிரியர் உரைசெய்துள்ளார் என்று தெளிக. ஒழிந்த புறத்திணையியல், களவியல், பொருளியல் என்னும் இவற்றுக்கும் பேராசிரியர் உரைசெய்துள்ளார் என்பது மேற்கூறியவாற்றான் துணிக. ஆகவே பொருளதிகாரத்து ஒன்பது இயல்களுக்கும் பேராசிரியர் உரைவகுத்துள்ளார் என்பதும், முதல் ஐந்து இயல்களின் உரை இன்னும் வெளியாகவில்லையென்பதும், தாமோதரனார் பதிப்பித்தஅவை நச்சினார்க்கினியர் உரையென்பதும் தெளிந்துகொள்க.

இனி, திருச்சிற்றம்பலக்கோவையார் உரையாசிரியர் நச்சினார்க்கினியரோ அன்றிப் பேராசிரியரோ என்று ஆராய்வாம்.

1. ஷ கோவையார் செய். 191 ல் 'பாலைக்கு நிலமில்லை ஆகவின் 'நானிலம் எனப்பட்டது என்று உரைக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

நச்சினார்க்கினியர் பாலைக்கு நிலம் வகுத்துக்கொண்டவர். இதனை அகத்திணையியலுக்கும் கலித்தொகை கடவுள்வாழ்த்துக்கும், சிறுபாணாற்றுப்படைக்கும், சிந்தாமணி. மண்மகள். செய். 5-க்கும் அவர் எழுதிய உரையான் உணர்க.

2. 'பூவால் குறிஞ்சி முதலாகிய நிலம் ஆயிற்று' என்பது கோவையார் முதற்செய்யுள் உரைக்குறிப்பு.

ஒழுக்கத்தால் ஆயிற்று என்பது அகத்திணையியல் நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பு.

3. ௸ செய். 50. உரையிலே, 'வல்விபுல்லல்' என்புழி இரண்டாம்வேற்றுமையுருபு செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது என்பது உரைக்குறிப்பு.

நச்சினார்க்கினியர்க்கு அது செய்யுள்விகாரம் அன்றென்பதும், 'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்' (எழுத்து-சூ-157) என்புழி, உம்மையால் ஒழிந்தும்வரும் என்பதனால் முடியும் என்பதும் கருத்து இதனைக் 'கோன்போல்' (சிந்தா-பதிகம்-5) என்புழியும், பாப்பமை காதற்றுயர்ப் பற்பல்காற்புல்லிக்கொண்டு' (௸ காந்தருவ-68) என்புழியும், அவ்வாற்றான் முடித்துக்காட்டியதனானும், தொகுத்தல் விகாரத்திற்கு முந்திய உரையாசிரியர்கள் காட்டிய 'மழவர் ஓட்டிய' என்னும் உதாரணத்தை விலக்கியதனானும் உணர்க.

4. ௸ செய். 83, 205–382 உரைக்குறிப்புக்களால் வினைமுற்றே எச்சமாகத்திரிந்ததென்பது அவ்வுரையாசிரியர் கருத்துப்போலும்.

நச்சினார்க்கினியர் அக்கொள்கையை மறுத்து வினையெச்சமே முற்றாகத் திரிந்ததென்று காட்டுவர்.

5. ௸ செய். 16. உரையால், செய்தெனெச்சம் பிறவினை கொள்ளாதென்பது அவ்வுரையாசிரியர் கருத்தென்று அறியப்படும்.

நச்சினார்க்கினியர் செய்தெனெச்சம் பிறவினையும் கொள்ளும் என்பர்.

6. காமர் (செய். 352) என்பதற்கு அழகு என்றே பொருள் கூறினார் அவ்வுரையாசிரியர்.

நச்சினார்க்கினியர் 'காமம் மருவும்' என்னும் இரண்டு சொற்கள் செய்யுள் விகாரத்தால் 'காமர்' என நின்றதென்பர். 'விருப்பம் மருவிய' எனப் பொருளும் கூறுவர். இதனை மருதக்கலி, செய். 80 உரையினும் மீண்டும் காண்க.

இவ்வகையான வேறுபாடுகள் இன்னும் பலவுள. ஆதலின், கோவையார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அல்லர் என்பது ஒருதலை. மற்று, அவர் பேராசிரியரே என்பது, பிரயோகவிவேகநூலாரும் சொக்கப்பநாவலரும் நுண்பொருண்மாலையாசிரியரும் சுட்டியுரைத்தவாற்றால் துணியப்படும்.

இனிப்பொருளதிகாரவுரையாசிரியர் ஆகிய பேராசிரியரும் கோவையார் உரைப் பேராசிரியரும் ஒருவரோ அன்றித் தம்முள் வேறுவெனின், இரண்டு உரைகளிலும் வினைமாற்றுப் பொருளில்வரும் மற்று என்னும் இடைச்சொல்பயில வழங்கியது காணுதும். செய்யுளியல் சூ, 110. உரையிலே 'நீடுவாழ்விராமின்' என்னும் அரிய செய்யுள்வழக்கு உரைநடை காணப்படுகின்றது. கோவையார் உரையிலே 'அதுகூறுவிராமின்' (செய். 55) எனவும், 'அணிவிராமின்' (செய். 58) எனவும், 'சேர்விராமின்: (செய். 214) எனவும் வந்தது. இது 'அடங்கலர் அட்டவேலான் ஆணையிராமின் என்றான்' (சிந்தா. காந்தருவ. 64.) என்புழிக் கண்ட செய்யுணடை.

செய்யுளியல். சூ. 120. உரையுள், 'ஒக்கும் பிறவெனின், ஒவ்வாதாகாதே' என்ற உரைநடைவழக்கு வந்தது.

கோவையார் செய். 43 உரையிலே, வருத்தத்தைச் செய்யுமென்றாகாதேயென உட்கொண்டு' என வந்தது.

இரண்டு உரைகளும் அணியியலுள் ஓதப்பட்ட அணிவகைகளைக் குறிக்கின்றன.

இரண்டு உரைகளிலும் இலக்கணமுடிபுகளில் வேறுபாடு காணப்படவில்லை இக்கூறியவைகளால் பொருளதிகாரப்பேராசிரியரும் கோவையார் உரையாசிரியரும் ஒருவரே என அறிக.

இனிச் செய்யுளியல் உரையிலும் மாபியல் உரையிலும் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' 'ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்' என்னும் எழுத்தியற் சூத்திரங்களுக்கு முன்னுள்ள உரையாசிரியர் மெய்யெழுத்துப்போல உயிர் ஏறி முடிய இடங்கொடுத்து நிற்கும் என்று கூறிய உரையை மறுத்துக், குற்றியலுகரமும் குற்றியலிகரமும் ஒற்றுப்போலப் புள்ளிபெற்றுநிற்கும் என்று பேராசிரியர் கூறினர். 'பிரிதுபிரி தேற்றலும்' என்னும் சொல்லதிகாரச் சூத்திரத்திற்கும் முன்னை உரையாசிரியர் ஆறும்வேற்றுமை உருபு மற்ற வேற்றுமையுருபுகளையும் ஏற்று நிற்கும் என்று கூறிய உரையை மறுத்து, வேறு உரை கூறினர். கோவையாரில் 'ஏழையின்' (செய். 19) என்புழி இன் ஏழனுருபு. அது புறனடையாற் கொள்ளப்பட்டதென்றார். 'ஏர்குவளை'

(செய். 66) என்னும் இயல்பு புறனடையாற் கொள்க எனவும் கூறினர். ஆதலின், அப் பேராசிரியர் எழுத்ததிகாரத்துக்கும் சோல்லதிகாரத்துக்கும் உரையெழுதியுள்ளார் என்பதும் அறிந்துகொள்க.

இனிப் பேராசிரியரது பொருளதிகாரவுரையையும் கோவையார் உரையையும், குறுந்தொகைக்கு அவர் உரைசெய்துள்ளார் என்பதையும் ஆழ்ந்து நோக்குக. நோக்கின், அவர் எனைத்து மாட்சியுடையவர் என்பது தெரிந்துகொள்ளலாம். பண்டைச்சங்கத்து மூவகைத்தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் இவர் உண்டு உமிழாதது ஒன்றும் இல்லையென்பது திண்ணம். பிற்பட்டநூல்களும் அப்படியே. சொற்களுக்கு உண்மைப்பொருள்கண்டு எழுதுவதிலும், இலக்கணக் குறிப்புக்கள் விடாமல் எழுதுவதிலும் மிகச் சிறந்தவர் இவர். அளவிடற்கரிய அரும்பொருள் செறிந்து, எதிர்ப்படும் தடைகளைத் தகர்த்துக்கொண்டு, தேக்கெறிந்துவரும் காவிரியாற்று ஒழுக்கன்றி இவர் உரையொழுக்கிற்கு ஒப்புக்காண்பதற்கில்லை. 'பல்காற் பழகினும் தெரியா உளவேல், தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும்' என்று இலக்கணக்கொத்து நூலாரால் பாராட்டப்பட்ட மூன்று கடல்களுள் இரண்டு இவர் கரைத்துக்குடித்து ஏப்பமிடப்பட்டனவெனின் இவர்க்கு ஓர் உவர்க்கடலை உண்டுமிழ்ந்த குறுமுனி ஒப்பாவது எப்படி? ஒருவழி ஒப்புக்கூறவேண்டுமானல் முன்னுள்ளோருள், நக்கீரரும் பின்னுள்ளோருள் சிவஞானமுனிவரும் தவிர வேறு ஒருவரும் கூறுவதற்கு இல்லை. யாம் கூறியது இவ்வளவும் அவர்க்குப் பொருந்தியதே என்பதற்கு அவர்தம் இயற்பெயர்திறக பேராசிரியர் என்னும் அடையடுத்த சிறப்புப்பெயரோ சான்று.

அற்றேல், 'பச்சைமா லனையமேகம் பௌவநீர் பருகிக் கான்ற, எச்சிலால் திசையும் உண்ணும் அமிழ்தென எழுநா எச்சில், மெச்சிநாளும் விண்ணோர் மிசைகுவர் வேத கீத, நச்சினர்க் கினியன் எச்சில் நறுந் தமிழ் நுகர்வர் நல்லோர்' என்று நச்சினார்க்கினியர் பாராட்டப்பட்டது எங்ஙனம் எனின், அது புனைந்துரைவகையாற் கூறியதன்றி உண்மையன்று. பாரத் தொல்காப்பியத்துக்கும் பத்துப்பாட்டுக்கும் கலிக்கும் குறுந்தொகையுள் இருநான்கு செய்யுளுக்கும் அவர் உரைசெய்தது உண்மையே ஆயினும், அவற்றுள் ஒன்றற்கேனும் இவர் புதிதாகஉரையெழுதி

கினர் அல்லர். அவையெல்லாவற்றிற்கும் முன்னுரைகள் இருந்தன என்று இவர் உரையினலே விளங்குகின்றது. தொல்காப்பிய நச்சினர்க்கினியர் உரையை நாம் மற்றை உரையாசிரியர் உரைகளோடு ஒப்புநோக்கிப் பார்ப்போமானல், சில சூத்திரங்களுக்கு இளம்பூரணர் உரையிலிருந்தும், சில சூத்திரங்களுக்குச் சேனவரையர் உரையிலிருந்தும், சில சூத்திரங்களுக்குக் கல்லாடர் உரையிலிருந்தும், பிறவற்றிலிருந்தும் பெரும்பான்மையும் படியெடுத்து எழுதினதாகக் காணலாம். பிற்காலத்து இலக்கணவிளக்கநூலுரையும் அப்படிப்பட்டதே. பேராசிரியரது உரையை நோக்கின், ஆழ்ந்தகன்று நுண்ணியதாய மதியில் தன்னியல்பிற் சார்ந்ததாய், பிறரெல்லாம் தன்னில் படியெடுத்தெழுத அவாவநிற்பதொன்று என்று கண்டுகொள்ளலாம். சிறப்புப்பாயிரவிருத்தியில், சிவஞானமுனிவரும், அகத்தியனரைத் தொல்காப்பியனரும் சபித்தார் என்னும் பொய்க்கதையை மறுத்தற்கு, 'வினையி னீங்கி விளங்கிய அறிவின்' என்னும் மரபியற்சூத்திரத்துப் பேராசிரியர் உரையிலிருந்து முன்னேர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவம்' என்னும் முறைப்படி படியெடுத்து எழுத முற்பட்டார் என்றால், அவ்வுரையின் மேம்பாடு மதிப்பில் அடங்குவதொன்று ஆமோ.

நச்சினர்க்கினியர் கல்வி மிக விரிந்தது என்பதில் தடையில்லை. பொருளாழமும் நுண்மையும் குறைவு எனக. இதனலன்றே அவர் பலவிடத்தும் வழுவிப் பிரயோகவிவேக நூலாராலும் சிவஞான முனிவராலும் கடியப்பட்டார் என உணர்க. சிவஞானமுனிவர் சூரூவளியில் பறக்காதது பேராசிரியர் உரை ஒன்றேயென அறிக. 'பாயின மேகலை (திருக்கோவையார்) என்பது ஆகுபெயர் என்ற பேராசிரியர் கூற்றைப் பிரயோகவிவேகநூலார் மறுத்தது அவர் கருத்தறியாமையால் என விடுக்க. நச்சினர்க்கினியர் முன்னுரையாசிரியர்கள் காட்டாத உதாரணங்களை மிகப்பலவாகக்காட்டியதும் உண்டு. சிற்சிலவிடங்களில் முன்னோரது பொருந்தாத உரைகளை மறுத்து பொருத்தமான பொருள் கூறியதும் உண்டு. ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேற்றுமை இன்னதென்று எடுத்துக்காட்டியதும், வினைபெச்சமே முற்றாய்த் திரிந்ததென்று நிலையுறுத்தியதும், எண்ணுப்பெயர் எண்ணப்படும் பொருளை உணர்த்தும் வழி ஆகுபெயரேயாமென முடித்ததும் பாராட்

டத்தக்கனவேயாம். அது நிற்க மணிவாசகப்பெருமான் அருளிய கோவையாருக்கும் பிற்காலத்தில் இயற்றப்பட்ட கோவைகளுக்கும் அகப்பொருள் இலக்கணத்துறைவகையில் சிறிது வேற்றுமை உண்டு. தமது உரையில், பேராசிரியர் அதற்கொத்தபடி துறைவகுப்புச் சூத்திரங்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டுகின்றார். அவை இன்ன நூலில் உள்ளனவென்று அறியப்படவில்லை. மற்றை உரையாசிரியர்கள் ஆட்சியில் வரவும் காணேம். இவருக்கு உரையெழுதுவதன்றி செய்யுள் இயற்றுதலினும் திறன் உண்டுபோலும். இது செய்யுளியல் உரையிலே இவர் 'உரைச்சூத்திரங்கள்' என்று எண்ணிறந்தன காட்டுவது கொண்டும், கோவையார் மூகவுரை செய்யுணடையில் எழுதியது கொண்டும் அறியப்படும். அதுகொண்டு கோவையார் உரையில் காட்டப்படும் துறையடைவுச் சூத்திரங்களெல்லாம் இவர்தாமே யியற்றினர்போலும் எனவும் அறிஞர் கூறுப

இலக்கண நூல்களிலெல்லாம், எழுத்தும் சொல்லும் ஆராய்வதோடு நின்றுவிடுவர் பெரும்பாலார். பொருளிலக்கணத்தில் மிகச்சிலரே நுழைவர். அதனுள்ளும் அகப்பொருள்நூலில் நுழைவார் மிக அரியர். கடைச்சங்ககாலத்திலே பொருளதிகாரம்வல்லார் அரியராயிருந்தார் என்றால் இக்காலத்தில் கேட்பானேன். இவ்வகப்பொருணூல்களில் இவ்வுரையாசிரியர்க்குள்ள தேர்ச்சி மற்றெவருக்கும் இல்லையென்று துணிந்து சொல்லலாம். அகப்பொருணூல்களில் உள்ளுறைப்பொருளும் இறைச்சிப்பொருளும் கண்டுரைப்பதுதான் மிகஅரிது. அது இவர்க்கு மிக எளிது. உவமவியல், சூ. 25 உரையுள், 'கரைசேர்வேழம்,' 'நீருறைகோழி நீலச்சேவல்' 'வண்ணவாண்டமை துளங்குவாலிழையே' 'பொய்கைப்பள்ளிப் புலவுநாறுநீர்நாய்' (ஐங்குறுநூறு. 12, 51, 73, 63) என்பவைகளுக்கும், செய்யுளியல். சூ. 110. உரையில், முல்லைவைந்நுதி' (அகம். 4) என்பதற்கும் இவர் கண்டெழுதியபொருள் வியக்கத்தக்கதெனக் காணலாம். உவமவியல். சூ 32 உரையுள் 'வையங்காவலர்வழிமொழிந்தொழுக' (புறம். 8) என்பதற்கு விரித்த உரையும் வியக்கத்தக்கது. அகப்பொருள் இலக்கணங்களில் ஆழ்ந்து விரிந்த அறிவுடைமையாற்றான் அவர் திருக்கோவையார் குறுந்தொகை முதலிய அகப்பொருள் நூல்களுக்கு உரையெழுதல் எளிதாயிற்று.

இனி, ஆத்திரையன்பேராசிரியன் பொதுப்பாயிரம் செய்தான் என்று மரபியலுரையில் இப்பேராசிரியரே குறித்தலால், அவர் இவரின் வேறெனவும், இவர்க்கு முற்பட்டவர் எனவும் அறிக. ஆத்திரையன் பேராசிரியன் என்றது தன்மைப்படர்க்கையாக இவரையே சுட்டியது என்று கூறுவாரும் உளர், அது பொருந்தாது யாப்பருங்கலவிருத்தியில் குறிக்கப்பட்ட பேராசிருயரும் வேறெனவே கொள்க.

இனித் தோல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியரது காலம் இதை வரையறுப்பதற்கு மற்றை உரையாசிரியர் காலத்தையும் ஒருவாறு வரையறுத்தல் வேண்டும். இவர் இளம்பூரணருக்குப் பிற்பட்ட காலத்தினர் என்பதும் நச்சினர்க்கினியர்க்கு முற்பட்டகாலத்தினர் என்பதும் பொருளதிகாரவுரைகளால் மயக்கமின்றி அறியப்படும். நச்சினர்க்கினியர்க்கு முந்தியவர் சேனவரையர் என்பதும், சேனவரையர்க்கு முந்தியவர் இளம்பூரணர் என்பதும் சொல்லதிகார வுரைகளால் அறியப்பட்டதே. கல்லாடருக்கும் பேராசிரியர்க்கும் இடம் சேனவரையர்க்கு முன்னே பின்னே தெரியவேண்டும். ஆனல், மரபியல் உரையிலே, பதழ்டிப்பு என்பதோர் இலக்கணம் படைத்துக்கோடலும் மேலபடிகடாத்தினை ஆனந்தக்குற்றம் எனப் பிற்காலத்தான் ஒருவன் குற்றம் காட்டுதலும், 'தன்னுன் ஒருபொருள் கருதிக்கூறல்' என்னும் குற்றத்தின்பாற்படும் என்றும், பாட்டியல் மரபெனக் காட்டுவன நின்றுபயனின்மை என்னும் குற்றத்தின்பாற்படுமெனவும், உவமவியல் உரையிலே, இவ்வோத்திற்கூறிய உவமங்களையும் சொல்லதிகாரத்துள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றன சிலபொருள்களையும் வாங்கிக் கொண்டு செய்யுட்கண்ணே அணியென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர் என்றும் பொசிரியர் கூறியதனல், இவர் நன்னூலாருக்கும் ஆளவந்தபிள்ளையாருக்கும் பாட்டியல் அணியியல் ஆசிரியர்க்கும் பிற்பட்டவர் என்பது தெளிந்து கொள்ளப்படும்.

மெய்ப்பாட்டியல் சூ. 25 உரையிலே 'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டதமைச்சு' என்னும் குறளை மேற்கோளாகக் காட்டிக் 'கற்றறிதல்' என்பதற்குக் கற்றலும் அறிதலும் எனப் பிரித்துரைத்தார். இது பரிமேலழகரால் மறுக்கப்படுதலால் அவர் பேராசிரியர்க்குப் பிற்பட்டவர்போலும். இப்பரிமேலழகர் உரை

பெரும்பாலும் சேனவரையர் கொள்கைகளைத் தழுவிநிற்றலால், அவர் சேனவரையர்க்குப் பிற்பட்டவர் என்று கொள்ளப்படுவர். அவர் நச்சினர்க்கினியர்க்கு முற்பட்டவர் என்பது பரிபாடலுரை முகவுரையால் அறியலாம்.

சேனவரையர், 'எல்லாமென்னும் பெயர்நிலைக்கிளவி பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே' என்னும் சூத்திரவுரையிலே 'மேனியெல்லாம் பசலையாயிற்று' என்புழி 'எல்லாம் என்பது எஞ்சாப்பொருட்டாய் வருவதோர் உரிச்சொல் என்பாரும் உளர்' என்றார். கோவையார் செய். 351ல், 'சென்றதெல்லாம்' என்புழி, எல்லாம் என்பது முழுதும் என்னும் பொருள்படுவதோர் உரிச்சொல் என்றார் பேராசிரியர் இதனல் பேராசிரியர் சேனவரையர்க்கும் முந்தியவர் என்பது பெறப்படும்.

இனிச் 'சேனவரையன்' 'சேனவாசி' யென்பன முறையே பண்படுத்துவந்த ஆண்பாற்பெயர் என்றும் பெண்பாற்பெயர் என்றும் நன்னூல் உரைகாரர் மயிலைநாதர் எடுத்துக்காட்டுவதனல், பேராசிரியர் அம்மயிலைநாதர்க்கு மிகமுந்தியவர் என்பது சொல்லாமலே அமையும்.

இனி, அடியார்க்குநல்லார் என்பவர் சிலப்பதிகாரத்துக்கு உரை செய்தவர் இவர் அந்நூல் முகவுரையில் 'காப்பியம்' என்பது வடமொழித் திரிபு எனக்கூறினர். இதனைச் சிந்தாமணிப் பாயிரவுரையில் நச்சினர்க்கினியர் மறுத்துள்ளார். இதனல் அடியார்க்குநல்லார் நச்சினர்க்கினியர்க்கு முந்தியவராவர். முந்நீர் • என்பதற்குப் பொருள் படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய மூன்று தன்மையும் உடையது கடல் என்றும் பாலையொடுநிலம் ஐந்துவகைப்படும் என்றும் அடியார்க்கு நல்லார் கூறியவாறே நச்சினர்க்கினியர் கூறினர் இவ்வடியார்க்குநல்லார் 'திங்களைப்போற்றுதும்' என்புழித்திங்கள் என்பது மங்கலச்சொல் எனக்குறித்தமையாலும், தண்டியலங்காரச் சூத்திரமேற்கோள் கூறினமையாலும், பாட்டியல் அணியியல் ஆசிரியர்க்குப் பிற்பட்டவராவர். இவர் 'குற்றியலுகரமும் அற்றெனமொழிப' என்னும் சூத்திரத்திற்குப் பேராசிரியர் கருத்துக்கிணங்கப் பொருள்கொள்ளவில்லை ஆயினும், பணித்தல் (காதை–8) அருளிச்செய்தல் 'மண்டலமே பணியாய்' (கோவை–177) என்புழிப்போல என்றும், வேம்பன் (காதை–16) கொன்றையன் (கோவை–400) என்றாற்போல என்றும், குறிப்பதனல், இவர்க்கும் முந்தியவர் பேராசிரியர் என்று கொள்ளலாம்,

இனி, எஞ்சிய உரையாசிரியர் காலத்தை வரையறை செய்யப்புகு முன், இப்போது புதிதாக அச்சிடப்பட்ட சொல்லதிகார வுரையாசிரியர் பேராசிரியரோ அன்றித் தெய்வச்சிலையாரோ என ஆராய்தல்வேண்டும். அதற்குப் பேராசிரியர் உரையென்று முன்னமே தெரியப்பட்டவைகளுக்கும் இவ்வுரைக்கும் கருத்து வேறுபாடுகள் உள்ளனவோ வென்று பார்ப்போம்.

1. 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்னும் முதற் சூத்திரவுரை இப்போது வெளிவந்த சொல்லதிகாரவுரையில் காண்பது பின் வருமாறு. 'உலகத்துப் பொருள் எல்லாவற்றினும் மக்களென்று சுட்டப்படும் பொருளை உயர்திணை யென்று சொல்லுவர். அவரல்லாத பொருளையும் பிறபொருளையும் அஃறிணையென்று சொல்லுவர் ஆசிரியர். அவ் விருதிணைக்கண்ணும் ஒலிப்பன சொல்லாவன என்றவாறு. மரபியல் சூ. 102: உரையில் பேராசிரியர் உரையென்றுகண்டது பின்வருமாறு:— 'உயர்திணையென்று சொல்லுப ஆசிரியர் மக்கட் சுட்டின்கண், அஃறிணையென்றுசொல்லுப ஆசிரியர் அவரலபிறவற்றுக்கண், அவ்விருதிணைப் பொருண்மேலும் இசைக்கும் சொல்' என்றவாறு.

2. வினையே குறிப்பே இசையே பண்பே' என்னும் சொல்லதிகாரச் சூத்திரவுரையிலே "ஊரெனப்படுவது உறையூர்' எனச் சிறப்புப் பற்றியும் வருமாறெனின், அது பெயர்ப்பொருளின் பாகுபாடாதலின பெயரோன அடங்கும்' என்று கூறப்புட்டுள்ளது.

'அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே' (செய்யுளியல் சூ 35) 'மாத்திரை முதலா அடிநிலைகாறும் நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே' (ஷை–104) என்புழி அது சிறப்புக்குறித்தது என்பது பேராசிரியர் உரை.

3. மரபியல் கடைசி சூத்திரவுரையிலே, 'அன்னபிறவும் கிளர்த்த வல்ல' என்னும் சொல்லதிகாரச் சூத்திரக்கருத்து ஒருவாறு பேராசிரியரால் உணர்த்தப்பட்டது. அது வருமாறு 'இசையும் குறிப்பும் பண்புமே யன்றிச் சீர்த்தியும் புனிறும் போல்வனவேறும் உள எடுத்தோதப் பட்டன எனவும், எடுத்தோதாது இசையும் குறிப்பும் பண்புமன்றிச் சேண் என்றும் தொறுவென்றும் வருவன உளவென்றும் கூறினமையின் ....எ—று. இது வொன்றே அவர் சொல்லதிகாரத்

திற்கு உரைசெய்துள்ளார் என்பதற்கு அமையும் சான்று. இவ்வுரை இச்சொல்லதிகாரப் பதிப்புரையிற் காணேம்.

4. 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்னும் சூத்திரத்துக்குப், 'புதியனபுகுதலும் பழையன கழிதலும்' என்னும் நன்னூற்சூத்திரக் கருத்திற்கிணங்கப் பேராசிரியர் மரபியற் கடைச்சூத்திர வுரையில் கூறினர், புதிய பதிப்புச் சொல்லதிகாரத்தில், அச் சூத்திரத்தின் கருத்து, வினைச்சொல் திரியுமாறு உணர்த்துதல் என்று கூறப்பட்டுள்ளது.

5. 'ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்' (இடையியல். சூத். 2.) என்பதற்கு அன்ன ஏய்ப்ப உறழ என்றாற்போலும் உவமவுருபுகள் என்று கொண்டார் பேராசிரியர் என்பது 'நாலிரண் டாகும் பாலுமாருண்டே' என்னும் உவமவியற் சூத்திரவுரையால் அறியப்படும். சொல்லதிகாரவுரையில் வேறுபாடாகக் காணப்படுகின்றது.

6. 'பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை' என்னும் சூத்திரத்தில் ஓதிய பத்து எச்சங்களுக்கும், சொல்லதிகாரவுரையில் கூறப்படும் இலக்கணம் ஒருவகை. அவைபற்றிப் பேராசிரியர் மரபியல் உரையிற்கூறிக் கும் இலக்கணம் வேறுவகை.

7. வினையெச்சம் முற்றாய்த்திரிந்ததென்று இச்சொல்லதிகாரத்து 'வினையெஞ்சுகிளவியும் வேறுபல்குறிய' என்னும்சூத்திரவுரையில் கூறப் பட்டுள்ளது. பேராசிரியர்கருத்து முற்று எச்சமாய்த் திரிந்ததென் பது.

இவற்றைப்போல இரண்டிலும் ஒன்றோடொன்று ஒவ்வாத உரைக் கருத்துக்கள் இன்னும் சிலவுள. ஆகலின் இச்சொல்லதிகாரவுரை யாசிரியர் பேராசிரியர் அல்லர் என்பதே துணிபு. பிறிதாறின்மையால் அவ்வாசிரியர் வேறுசில ஏட்டில் கண்டவாறு தெய்வச்சிலையார் என்பதே துணிபு.

இனித் தேய்வச்சிலையார் காலவாராய்ச்சி.

'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரத்து உரையிலே, நச்சினர்க்கினியர், 'இசைக்கும்' என்னும் சொல்லிற்கு

'ஒலிக்கும்' என்பது பொருளாக முற்பட்ட உரையாசிரியர் ஒருவர் கூறியதைச்சுட்டி மறுத்துள்ளார். கல்லாடர் உரையிலும் அவ்வாறே மறுக்கப்பட்டுள்ளது.

இத் தெய்வச்சிலையார் உரையிலே, அங்ஙனம் 'இசைக்கும்' என்பதற்கு 'ஒலிக்கும்' என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இளம்பூரணர் சேனாவரையர் உரைகளில் அவ்வாறு பொருள் கூறப்படவில்லை. உயர்திணை என்பது பண்புத் தொகையென்ற ஒருவர் கூற்று, நச்சினார்க்கினியர் உரையிலே மறுக்கப்பட்டுள்ளது. தெய்வச்சிலையார் உரையிலே, அது பண்புத்தொகையென்று குறிக்கப்பட்டுள்ளது. மற்றை உரைகளில் அதைக் காணேம் ஆகலின் நச்சினார்க்கினியரும் கல்லாடரும் தெய்வச்சிலையார் உரையென்று பெயர்சுட்டி மறுத்திலரேனும், மறுக்கப்பட்டது தெய்வச்சிலையார் உரையேயாம். ஆகவே, தெய்வச்சிலையார் என்பார் நச்சினார்க்கினியர்க்கும் கல்லாடர்க்கும் முற்பட்டவர் என அறிக.

இனி, அச்சூத்திரத்து இளம்பூரணர் உரையிலே, 'என்ப' என்னும் முற்றுச்சொல் குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனல் பகரம் குறைந்து, மன்னும் ஆரும் என இரண்டிடைச்சொல் விரிக்கும் வழி விரித்தல் என்பதனல் விரிந்து, என்மனர் என்றாயிற்று' என்று கூறப்பட்டுள்ளது. தெய்வச்சிலையார் உரையில் அவ்வகைமுடிபு மறுக்கப்பட்டுள்ளது. 'பிறிதுபிறிதேற்றலும்' என்னும் சூத்திரத்து இளம்பூரணர் உரையிலே ஆறும்வேற்றுமைஉருபு மற்ற வேற்றுமையுருபுகளையேற்கும் என்று பொருள் கூறப்பட்டு, 'சாத்தனதனை' என உதாரணம் காட்டப்பட்டது—இது தெய்வச்சிலையார் உரையில் மறுக்கப்பட்டுள்ளது. 'நெடியனும் வலியனும் ஆயினன்' என ஆக்கவும்மைக்கு உதாரணம் இளம்பூரணர் காட்டினர், இதுவும் தெய்வச்சிலையார் உரையில் மறுக்கப்பட்டுள்ளது. இதனல் தேய்வச்சிலையார் இளம்பூரணருக்கு பிற்பட்டவர் என்பது துணிவு.

இனித் தேய்வச்சிலையார் சேனாவரையர்க்கு முற்பட்டவரோ பிற்பட்டவரோ என்று ஆராய்வாம்.

1. 'உயர்திணையென்மனர் மக்கட்சுட்டே' என்னும் சூத்திரத்து உரையிலே 'என்மனர்' என்பதற்கு இளம்பூரணரால் குறிக்கப்பட்ட முடிபை மறுத்த தெய்வச்சிலையார், அது 'என்ப' என்னும் முற்றுச்

சொல்லின் திரிபு என்று கூறினர்—'இயற்சொற்றிரிசொல்' என்னும் சூத்திரத்துச் சேனாவரையர் உரையிலே, என்மனர் என்பதை வினைச் சொற்றிரிபு என்பாரும் உளர். அது 'என்றிசினோர்,' 'பெறலருங் குரைத்து' என்பனபோலச் செய்யுண்முடிபு பெற்றுநின்றதென்றலே பொருத்தமுடைத்து' என்று கூறப்பட்டுள்ளது.

2. 'வேற்றுமைத் தொகையே உவமத்தொகையே' என்னும் சூத்திரத்துச் சேனாவரையர் உரையிலே, 'வேற்றுமைஉருபும் உவம வுருபும் வினைச்சொல்லீறும் பண்புச்சொல்லீறும் தொகுதலின் தொகை யாயின என்பாரும், அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலின் தொகையாயின என்பாரும், எனஇருதிறத்தர் ஆசிரியர்.................. இரண்டுசொல் தொக்கன என்பதே ஆசிரியர் கருத்தாம்' என்று கூறப் பட்டுள்ளது - இந்த இரண்டு கொள்கைகளுள் முந்தியது இளம்பூரணர் உரையில் கண்டது. பிந்தியது தெய்வச்சிலையார் உரையில் கண்டது.

3. 'மன்னாப்பொருளும் அன்னவியற்றே' என்புழி 'மன்னாப் பொருள்' என்பதற்கு 'இல்லாப்பொருள்' என்று இளம்பூரணர் உரைத்த உரையைத் தெய்வச்சிலையார் மறுத்து 'நிலையாதபொருள்' எனப் பொரு ளுரைத்து 'இளமையும்நிலையாது' யாக்கையும் நிலையாது' என உதார ணம் காட்டினர். சேனாவரையர் 'இல்லாப்பொருட்கு நிலையுறுதல் இன்மையின் மன்னாப்பொருள் என்றார்' என்று கூறினர்—இது தெய்வச் சிலையார் மறுப்புக்கு விடையென்பது உய்த்துணரப்படும்.

4. 'தன்மை சுட்டலும் உரித்தெனமொழிப' என்னும் சூத்திரத் துச் சேனாவரையர் உரையிலே 'நின்றுவற்றும்' என்னும் ஒருகுற்றத்தின் இயல்பு யாம் முன்கண்டுகொண்டது—இது இப்போது தெய்வச்சிலையார் உரையில் காணப்படுகின்றது—அச்சூத்திரத்து இளம்பூரணர் தந்துணிபு இதுவெனக் கூறிவிட்டுப் பிறர் மதம் ஒன்றையும் எடுத்துரைத்தார்— அது வருமாறு:—

'இனி, ஒருவன், 'வேறிடம்' என்பதனைத் 'துணியப்படும் பொரு ட்கு வேறாகி நிற்கும் பொருள்' என்னும் அவன் உதாரணம் காட்டு மாறு 'குற்றிகொல்லோ மகன்கொல்லோ என ஐயமுற்றான், மகனென்று துணியின், குற்றியன்று மகன்' எனவும், குற்றியென்று துணியின்,

மகனல்லன் சூற்றி எனவும் வருமென்னும்'...............................

இவ்வாறு பிறர் உரையாகச் சுட்டப்பட்டது தெய்வச்சிலையார் உரைக்கு முழுதும் ஒத்திருப்பதுகொண்டு, செய்வச்சிலையார் இளம்பூரணருக்கு முற்பட்டவரென்று கருதற்கு இடனுண்டு. ஆயினும், அத்தெய்வச் சிலையார் இளம்பூரணர் கருத்துக்கு மாறுக உரைத்த உரைகள் பலவற்றுக்கும், இளம்பூரணர் உரையில் மறுப்புக்காணுமையாலும், உரியியல் உரையில் தெய்வச்சிலையார் காட்டிய உதாரண மேற்கோள்கள் பெரும் பான்மையும் ஒத்தனவாகச் சேனுவரையர் உரையில் காணப்படுவதனுலும், இளம்பூரணர் சுட்டிய பிறர் உரையென்றது, அவர்க்கு முன்னிருந்த வேருேர் ஆசிரியர் உரையென்று கொள்க.

'ஆண்மை யடுத்த மகனென் கிளவும்' என்னும் சூத்திரத்துச் சேனுவரையர் உரையிலே, 'அவை முதலாகிய பெண்டென் கிளவியும்' என்பதுபற்றி, 'பெண்டன் கிளவியும்' என்று பாடமோதி, 'அவை அவ்வாட்டி இவ்வாட்டி உவ்வாட்டி என்பாரும் உளர்' என்று கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் அவர்குறித்த உரை இளம்பூரணர் உரையன்று. 'செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே' என்புழி உம்மை ஆக்கவும்மை என்பாரும் உளர் என்று சேனுவரையர் குறித்ததும் இளம்பூரணர் உரையன்று.

'முதலுஞ் சினையு மென்ரு யிருபொருட்கும்' என்னும் உவமவியற் சூத்திரவுரையிலே, மாரியானையின் வந்துநின் றனனே' என்பது திணை மயங்கிற்று.........இக்கருத்து அறியாதார் இவற்றைச்செப்பினும் வினவினும்' என்புழி இலேசுகொண் டுரைப்ப' என்று பேராசிரியர் கூறினுர். இதுவும் இளம்பூரணர் உரையினும் காணப்படவில்லை. இதனுல் இளம்பூரணருக்கு முன்னுகப்பின்னுக நாம் கண்டவுரைகளின் வேருகச் சிலவுரைகள் வழங்கினவென்று தெளிக.

'செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு' என்னும் சூத்திரவுரையிலே, 'இம்மகள்கண் நல்லவோ கயல் நல்லவோ' என உதாரணம் காட்டினர் இளம்பூரணர். தெய்வச்சிலையார் அவ்வுதாரணத்தை அடுத்த 'தகுதியும் வழக்கும்' என்னும் சூத்திரவுரையில் காட்டினுர். கல்லாடர் 'செப்பினும் வினவினும்' என்புழியே காட்டினுர். சேனுவரையர் அவ்

வுதாரணத்தை மறுத்து, 'உண்மையுணர்தற்கு வினையதன்றி ஐயவுவமை வாய்ப்பாட்டால் கண்ணைப்புனைந்துரைத்தல் கருத்தாகலின், அன்னவை யெல்லாம் உரையென்னும் செய்யுளாம்' என்றார்.

'குஐ ஆனெ னவரூஉம் இறுதி அவ்வொடு சிவணும்' என்னும் சூத்திரவுரையில். ஐ உருபு அகரமேற்று வருதற்கு 'காவலோனக் களிறஞ் சும்மே' என உதாரணம் காட்டினர் சேனாவரையர். தெய்வச்சிலையார் அதற்கு உதாரணம் வந்தவழிக்காண்க என்றார்.

பெண்மைசுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மைதிரிந்த பெயர் நிலைக்கிளவியும் என்னும் சூத்திரத்துச் சேனாவரையர் அலியென்னும் பெயர் உயர்திணைப்பான்முடிபு கொள்ளாதென்று விலக்கினார். அது அச்சூத்திரத்துத் தெய்வச்சிலையார் கொள்கையை மறுப்பதாகக் காணப் படுகின்றது.

'பெண்மையடுத்த மகனென்கிளவியும்' என்பது பற்றிச் சேனாவரையர் 'புறத்துப்போய்விளையாடும் பேதைப்பருவத்துப் பெண்மகளை மாறோகத்தார் இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப' என்று கூறியுள்ளார். இது 'அவ்வாறு கூறுதல் பண்டையார் வழக்கு' என்று தெய்வச்சிலையார் கூறிய உரைக்கு மறுப்பாகக் காணப்படுகின்றது.

எச்சவியலுள் ஓதப்பட்ட பெயரெச்சம் வினையெச்சம் பிரிநிலையெச்சம் உம்மையெச்சம் முதலியின, வினையியலுள்ளும் இடையியலுள்ளும் ஓதப்பட்ட அவற்றின் வேறெனத் தெய்வச்சிலையார் கொண்டு, அவற்றிற்கு உதாரணங்களும் வேறாகக்காட்டினார் சேனாவரையர் அவ் வினையியலுள்ளும் இடையியலுள்ளும் ஓதப்பட்ட எச்சங்களுக்கே முடிபு எச்சவியலுள் ஓதப்பட்டதென்று, கடாவிடை உள்ளுறுத்து உரைகூறினார் இதுவும் சேனாவரையர் தெய்வச்சிலையார் கொள்கையை மறுத்தவாறென்று கருதப்படும்.

இக்கூறியவாற்றால் தெய்வச்சிலையார் இளம்பூரணருக்கும் சேனாவரையர்க்கும் இடைப்பட்ட காலத்தினர் என்று துணியப்படும்.

சேனாவரையர் உரையிலே 'பிறிதுமொழிதல்' என்னும் அலங்காரம் குறிக்கப்படுவதனால் அவருடைய காலம் 'அணியியல்' உடையார் காலத்திற்குப் பின்னதென்க.

கல்லாடர் காலம் தெய்வச்சிலையாருக்கும் நச்சினர்க்கினியர்க்கும் இடைப்பட்டதென்பது முன்னமே முடிந்தது. இனி அவர் உரையிலே சேனவரையரால் மறுக்கப்பட்ட உரைப்பகுதிகள் காணப்படுதலால் அவர்க்குமுந்தியவரென்று கொள்ளுதல் வேண்டும்.

'என்மனர்' என்பதன் முடிபு இளம்பூரணர் கூறியவாறே கல்லாடர் கூறினர். 'தகுதியும் வழக்கும்' என்னும் சூத்திரத்துக்கும் அவ்வாறே கூறியுள்ளார். அதனையே நன்னூல் விருத்தியுரைகாரர் தழுவினர். சேனவரையர் மறுப்புக்கு விடையிறுக்கக் காணேம். 'மன்னுப்பொருளும்' என்னும் சூத்திரவுரையிலே, 'முயற்கோடும், யாமைமயிர்க்கம்பலமும் துன்னூசிக்குடரும் சக்கரவர்த்திகோயிலுள்ளும் இல்லை' என உதாரணம் காட்டினர். சேனவரையரும் நச்சினர்க்கினியரும் ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருளொழிய' என்னும் சூத்திரத்தால் அமைத்துக் காட்டிய 'ஆதீண்டுகுற்றி, வயிரகடகம்' என்பனவற்றைப் 'பெயரினும்தொழிலினும் பிரிபவையெல்லாம்' என்னும் சூத்திரத்து 'எல்லாம்' என்னும் இலேசுகொண்டு அமைத்துக் காட்டியுள்ளார்.

'செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு' என்னுஞ்சூத்திரவுரையிலே சேனவரையரால் மறுக்கப்பட்ட 'இம்மகள்கண் நல்லவோ கயல் நல்லவோ' என்னும் உதாரணம், இளம்பூரணத்தில் காட்டப்பட்டபடியே கல்லாடர் உரையில் காட்டப்பட்டுள்ளது.

இளம்பூரணர் உரையினுந் தெய்ச்சிலையார் உரையிலும் காணுத 'குறுஞ்சூலி,' 'குறுந்தடி' என்னும் உதாரணங்கள் 'இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை' என்னும் சூத்திரவுரையிலே, கல்லாடரால் காட்டப்பட்டு, அவை வாளா பெயராய் நின்றனவென்று குறிக்கப்பட்டன. அவை பண்புகொள்பெயர் எனப்படா என்று சேனவரையர் மறுத்துள்ளார்.

'குடிமையாண்மை' என்னும் சூத்திரத்தில், 'அன்னபிறவும்' என்றதனல், 'வேந்து வந்தது' முதலியவற்றேடு, 'பேடுவந்தது' 'பேடுகள் வந்தன' என்பனவற்றையும் உதாரணமாகக் கல்லாடர் காட்டினர்.

'பெயர்நிலைக் கிளவி காலம் தோன்ரு' என்னும் சூத்திரவுரையில், நச்சினர்க்கினியரால் எடுத்துக்காட்டப்பட்ட பெயர்ப்பெயரும், வினைப்

பெயரும், தொழிற்பெயரும் ஆகிய பாகுபாடுகள் கல்லாடர் உரையிற் கண்டவாறே உள்ளன.

'காப்பின் ஒப்பின்' என்னும் சூத்திரவுரையில், நச்சினார்க்கினியர் 'கருத்தில்வழிநிகழும் செயப்படுபொருளும், செய்வானும் செயப்படு பொருளும் தானேயாய் நிற்பனவும் கொள்க' என்று உரைத்துச் 'சோற் றைக்குழைத்தான்,' 'சாத்தன் தன்னைக்குத்தினான்' என உதாரணமும் காட்டினார். இது கல்லாடர் உரையிலன்றிக் காணப்படவில்லை. கல்லாடர் அதன்மேலும் தெரிநிலைச்செயப்படுபொருளும் தெரியாநிலைச் செயப்படுபொருளும் என இரண்டு பாகுபாடு கூறி, 'மரத்தைக்குறைத் தான் சாத்தன்,' 'சாத்தனால் மரங்குறைக்கப்பட்டது' என உதாரணங் காட்டினர்.

இக்கூறியவாற்றால் கல்லாடர் சேனாவரையர்க்கு முற்பட்டவர் ஆகார் என்பது துணியப்படும். இவ்வுண்மை அறியமாட்டாதார், இவர் கடைச்சங்கப்புலவருள் ஒருவராகிய கல்லாடரேன மயங்குப. இது நிற்க.

இனித், தெய்வச்சிலையார் வரலாறு:—இவர் உரைக்குச் சிறப்புப் பாயிரமென ஒன்றும் காணப்படாமையால் இவர்வரலாறு இன்னதென்று விளங்கவில்லையாயினும், ஆகுபெயர்ச்சூத்திரவுரையில், 'பிறந்தவழிக் கூறல்' என்பதற்கு 'வேளாங்காணி' என்பது அவ்விடத்தில் தோன்றிய ஆடையை உணர்த்தும்' என்றார் ஆதலால், இவர் சோணாட்டில் நாகப் பட்டினத்திற்குத் தென்பால் உள்ள 'வேளாங்காணி' என்னும் ஊரிலோ அன்றி அதற்கு அருகில் உள்ளதொரு ஊரிலோ இருந்தவர் என்று கருதற்கு இடமுண்டு.

தலைமைபற்றிய வழக்கிற்குப் 'பார்ப்பார் வேதம்' என்று காட்டி யுள்ளார். சொல். (சூ. 55) என்பதற்கு வேதம் என்று பொருள்கூறி னார். அச்சூத்திரவுரையில் 'இந்நூல் செய்தான் வைதிக முனிவன்' என்றார். சூ. 87. 410 உரைகளிலே வடமொழியில் பாணினீயர் கொள்

கையைச் சுட்டினர். வடமொழி இலக்கணநூன்முறைபற்றி சூ. 2 66, 68, 81, 292 உரைகளிலே குறித்தனர். 'பஞ்சதிராவிடம்' 'லோபம்' 'பரிணமம்' 'வாக்கியம்' 'கோமூத்திரம்' என வடசொற்களை வழங்கினர். இதனால் இவர் அந்தணர் குலத்தினர் என்பதும் வடநூல்களில் மிகத் தேர்ச்சியுடையவர் என்பதும் துணிந்துகொள்ளப்படும். ஒரு உரையேட்டின் இறுதியிலே 'ஆத்திரேய' என்ற அளவில் எழுத்துக்கள் காணப்பட்டன என்றமை பொருத்தமேயாம். ஆகவே இவரும் ஆத்திரேயகோத்திரத்தினர் என்று கொள்ளலாகும். இனி இவர் சமயம் சைவசித்தாந்தம் என்பது சூ. 32, 438 உரை முதலியவற்றால் துணியப்படும். இவர் தருக்கநூலினும் வல்லவர் என்பது சூ. 13 உரையினால் விளங்குகிறது.

இவர்க்குத் தெய்வச்சிலையார் என்று பெயர்வந்ததற்குக் காரணம் தெரியவில்லை. ஆயினும் அது அவர்க்கு இயற்பெயரன்று; சிறப்புப் பெயரேயாம். அது அவர் தவவொழுக்கத்தால் மனத்தூய்மையுடையார் என்பதைக் குறிக்கும். தொல்காப்பிய வுரையாசிரியருள் சேனவரையரே வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் நிலைகண்டுணர்ந்தார் என்று சிவஞானமுனிவராலே கொண்டாடப்பட்டனர். ஆயினும் இத் தெய்வச்சிலையார் உரையை ஊன்றிப் பார்க்கின், அச்சேனவரையருடைய கூரறிவும் புகற்கரிய பூழையினும் அவர் புகுந்து வெளிப்பட்டார் என்பது போதரும். சேனவரையர் 'செய்யா' என்பதோர் வினையெச்சவாய்பாடு என்று தெரியாமல், அது 'செய்யூ' என்னும் வினையெச்சவாய்பாடு திரிந்ததென்றார். தெய்வச்சிலையார் 'செய்யா வென்னும் வினையெஞ்சுகிளவியும்' என்னும் எழுத்ததிகாரச்சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டி, அதுவும் ஓர் வினையெச்சவாய்பாடென்று முடிவு செய்தார். சேனவரையர் எடுத்துக்காட்டாத எதிர்மறைப்பொருளில் வரும் ஏகாரம் ஒன்றும், ஐயப்பொருளில் வரும் ஓகாரம் ஒன்றும் உள்ளதாகக் காட்டி அதற்கு 'மாறுகோ ளெச்சமும் வினவும் ஐயமும்' என்னும் எழுத்ததிகாரச் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டினர் தெய்வச்சிலை

யார். இத்தெய்வச்சிலையார் காட்டியபடியே நச்சினார்க்கினியர் தம்முரையில் காட்டியதூஉம் என அறிக. 'ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்றும், இரவின் கிளவி ஆகிடனுடைய' என்னும் சூத்திரவுரையிலே, நச்சினார்க்கினியார், 'ஈதாகொடு என்னும் சொற்கள், ஒரு பறவையின் பெயரும், தொழிற்பொருண்மையும் கொடுமையும் ஆதலின்றி இரப்போன் கூற்று ஆதலும் உரிய' என்றெழுதியது இத் தெய்வச்சிலையார் உரையிலிருந்தபடியேயாம்.

இன்னும் அவர் ஆவுமானியற் பார்ப்பன மாக்களும்' என்பது அண்மைவிளியென்றதும், கூறி, அதற்குக் 'கிழவோன்' என்பதை உதாரணமாகக் காட்டியதும், தெய்வச்சிலையார் உரையில் கண்டபடியே நச்சினார்க்கினியர் எடுத்தாண்டதைக் கூறுவது பெரிதன்று. சிவஞான முனிவர் தந்துணிபாகக் கூறியனபல தெய்வச்சிலையார் உரையிலே காணப்பெறுதும் எனின் இவ்வுரையின் அருமை உரைக்கற்பாலதோ? 'நெடியனும் வலியனும் ஆயினன்' என்பது ஆக்கவும்மைக்கு உதாரணமாக இளம்பூரணர் காட்டியதைச் சிவஞானமுனிவர் மறுத்து, அது எண்ணும்மையே என்றார். தெய்வச்சிலையாரும் அப்படியே கூறியுள்ளார். ஆறும்வேற்றுமை உருபு பிறவேற்றுமை உருபுகளை ஏற்குமென்று இளம்பூரணர் சேனாவரையார் கூறிய வுரையைச் சிவஞானமுனிவர் மறுத்துள்ளார். 'உருபுதொகவருதலும்' என்பது தொகாநிலைத்தொடரின் கண் வேற்றுமை உருபு தொகுமாறு கூறிற்றென்றார். கிளியும் பூவையும் பேசுதலால் தன்மை இருதிணைக்கும் பொது என்பார் கூற்றை மறுத்துள்ளார். வினைமுற்றே எச்சமாகத் திரிந்தது என்பாரை மறுத்து எச்சமே முற்றாகத்திரிந்த தென்றார். இக் கொள்கைகளெல்லாம் தெய்வச்சிலையார் கொள்கைகளாகவே உள்ளன. 'சுண்ணந்தானே' என்னும் சூத்திரவுரையில் இளம்பூரணரும் பிறரும் காட்டாத 'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்' என்னும் செய்யுளை உதாரணமாகக் காட்டியுள்ளார். எச்சவியலுள் ஓதப்பட்ட மூன்றொழிந்த பத்து எச்சங்களும் ஏனை 'உரையாசிரியர்கள் கொண்டபடி வினையியலுள்ளும்

இடையியலுள்ளும் ஓதப்பட்டனவல்லவென்று களைந்து, அவை பலபடி யாலும் பெயரும் வினையும் முதலிய சொற்களை வருவித்துரைத்தற்கு விதிகளாகக் கொண்டுரைத்தார். இது 'பிறிதொடு படாஅன் தன்மதம் கொளல்' என்னும் மதம். அம்மதம்பற்றிவரும் சூத்திரவுரைகள் இன்னும் பலவுள. மற்றை உரையாசிரியரெல்லாம் வினைமுற்றுச் சூத்திரத்தை எச்சவியலுள் வைத்து உரைகூறினர். தெய்வச்சிலையார் அச்சூத்திரத்தை வினையியலுள் வைத்து உரைகூறி, அச்சூத்திரம் முன்னை உரை எழுதினோரால் இடம் மாற்றிவைத்து உரைக்கப்பட்டதென்று குறித்தார். இவர் துணிவு மிகவும் பாராட்டத்தக்கது. பெயரெச்சம் வினையெச்சம் வினைமுற்றென வினைச்சொல் மூன்றுவகைப்படும். அவற்றுள் பெயரெச்சத்துக்கும் வினையெச்சத்துக்கும் வினையியலுள் இலக்கணம் ஓதியஆசிரியர் தலைமையாகிய வினைமுற்றுக்கு இலக்கணம் ஆண்டே ஓதாது எச்சவியலுள் ஓதினரெனல் பொருந்தாததேயாம்.

இத்தகைய சிறப்பினதாயிருந்தும், தெய்வச்சிலையார் உரை இதுநாள்காறும் வெளிவாராதிருந்த காரணம், பிற்காலத்திலே சமயநூற்பயிற்சியும் அதற்குத்துணையாகிய தருக்கநூற்பயிற்சியும் மிகுந்து, அத் தருக்கவுரைச்செறிவுள்ள சேனாவரையர் உரையைப் பெரிதென்று புலவர்கள் மயங்கிப் பாராட்டத்தலைப்பட்டதேயாம். தருக்கவுரையை மிகையென்றுகொண்டு, இலக்கணநூலின் உண்மைப்பொருள் காணுதலே கருத்தாக உள்ளார்க்கு, இத்தெய்வச்சிலையார் உரையினும் சிறந்ததொன்று இப்போது கிடையாதென அறிக.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

ம. நா. சோமசுந்தரம்பிள்ளை.

கம்பராமாயணக் கௌஸ்துபமணிமாலை.

[கே. என் சிவராஜபிள்ளை.]

(முன் தொடர்ச்சி).

16 பாங்கில் வேந்தைப் பனிக்குடை பாலிக்கத்
தாங்கும் சக்கர வர்த்தித் தகையினர் ;
தூங்குஞ் செந்தமிழ்த் தொல்கவி ராஜர்மேல்
ஓங்கும் கம்பன் ஒருகவி நீழலே.

17 மான சமடு வந்த சரயுபோல்
பாந சைப்புல வர்பல குன்றிடை
வான சைல மெனவளர் கம்பனுள்
ஞான வாவியிக் காவியம் நல்குமால்

[வேறு]

18 "வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான் மீகி" தந்த
ஓங்கிடும் புகழ்நூற் பற்றி யுதவின னேனும் கம்பன்
வீங்கறி வுடைய ஞாலம் வேண்டிய வாறு காதை
ஆங்கங்கே திருத்தி யாண்டும் அழகுற அமைத்த திந்நூல்.

19 முதலென வழிநூ லென்ன முடித்துளார் முறையிற் சென்றே
சதிருறு முதநூல் தானே தலைநின்று தயங்குமென்பர் ;
மதத்திறன் மதிக்க லாதிம் மதம்விரித் துரைத்தார் தாமும்
எதிரிலா ராம காதை யெதிரநா வெடுக்கலாரே.

20 நூலினை வகுத்துக் கூறும் நுண்ணறி வெனைத்தென் றாலும்
மேலினை* வகுக்கு மாபோல் வினைக்கடை வியர்த்த மாமே;
ஞாலத்திற் புலவர் புந்தி நடைத்திறன் கணித்தல் சீவன்
மூலத்தைக் கணித்தல் போலும் மூட்டுற்ற முயற்சியம்மா!

21 பூதபௌ திகத்துட் காலப் புதுமைபூத் தொளிராச் சத்தி
ஒதுமோ ரளவைத் தாகி யொ துங்கலு மதற்கும் வேறாய்

---

*மேல்=ஆகாயம்.

மேதகு மனத்தி னூற்றம் விளைந்துமேக் குறலும் கால
பேதத்திற் பின்ன லாய பெரும்பரிணாம* மன்றே.

22 ஆதலால் அறிஞ ரானோர் அளக்குறார் உளத்தி னாற்றல்
பூதலத் துயிரின் போக்கைப் புனைபொறிப் புகுத்த நோக்கார்
மாதவத் துயர்ந்த முன்னோர் மாண்புள ரெனினும் பின்னோர்
மேதினி விளக்கு ஞானம் மேவல்போல் மேவி டாரே.

23 பண்டமை நூல்க ளெல்லாம் பண்டையர்ப் போலப் பீடு
கொண்டன வென்னக் காட்சி கோடற்க; இற்றை ஞான்றும்
எண்டயங் குறுநூல் செய்தாங் கிசைநட்டா ருளரே யாதற்
கண்டனம் ராம லிங்க கவியருட் பாவின் காட்டால்.

24 ஆரிய மொழிக்கோர் ஆதி கவியெனும் அழிவில் சீர்த்தி
சேரிய முனிவன் றானே செப்பின னேனுந் தொன்னூல்
கூறிய அறிவில் ஞானக் கோளகைக் குணித்த கம்பன்
சீரிய கலைக்குட் சித்ர கலைக்கவி சிறத்தல் செய்ய,

25 குறைப்பன குறைத்து வேண்டிக் கொள்வன கொண்டு மாற்றம்
செறிப்பன செறித்துச் செப்ப னிட்டசே டகப்பொற் றட்டிற்
குறிப்பன கோளத் துள்ள துகிலிகைக் கொண்டு யாணர்ப்
பொறிப்பன வாய பொன்சித் திரத்தின் வித்தார மம்ம!

(வேறு)

26 காதை யுள்ளமை காதைக
ளோதும் வாறெவர் ஓதினார்
மோது வார்புனற் கங்கைசார்
போது லாம்நதி போவபோல்?

27 இராம காதையெ னாவியல்
அராம மேலிடு வார்க்கிவை
சிராமம்† தீர்த்திடச் சிந்துபூம்
பாகப் பித்திகைப் பத்தியே.

*பரிணாமம்=இயற்கைத் தோற்றத்தினை விளக்கும் அபிவர்த்தனவாதக் கொள்கை. (Evolution).

† 'சிரமம்' என்னுஞ்சொல் நீண்டு நின்றது.

28 படிகம் போல்தெளி பனுவலும்
அடிக ளோடும ராகமும்
துடிகொள் தூக்குடை நோக்கமும்
வடிகொ ளும்பொருள் வண்மையும்.

29 போந்த காதையின் போக்கொடு
ஆய்ந்து நோக்கியம் மாகவி
வேய்ந்த காவிய விசித்திரம்
தேர்ந்து கொள்ளுவர் சீரியோர்.

30 செந்தொ டையொடு செம்பொருள்
வந்து லாவு கிளைக் கதை
முந்து சந்த முதற் கதைக்
குந்து மந்தமில் லந்தமே.

31 ஆன்ற ஓவியச் சீரையார்ந்
தேன்றி லங்குறு சித்திரம்
தோன்ற லான எழிற்சுடர்
ஞான்ற பின்னொடு காறுமே,

32 இசைக் கிசைதரு பின்னிலை*
இசைய தாகி யிணைந்தபோல்
வசையில் மாக்கதை மாணுற
அசைப்ப ராலநு காதையே.

(வேறு)

33 காவின் வேந்தனும் காவினைத் துறந்தனன், கமலப்
பூவின் வேந்தனும் படைப்பினிற் பொலிவழிந் தொழிந்தான்,
சாவின் வேந்தனும் தண்ணளிக் காட்டிடச் சமைந்தான்
பாவின் வேந்தனும் கம்பன்பா பம்புபுன் னலத்தான்.

34 கள்ளுண் மாந்தரும் கள்ளினைக் கைப்பெனக் கனன்றார்,
புள்ளுண் வேடரும் புனிதநன் னெறிவந்து புகுந்தார்,

---

*பின்னிலை=Back ground. சித்திர கலைகளில் எழும் உருவங்களி னெழிலை மிகுக்க அவற்றின் பின்னமைக்கப்படு மாங்கததினையே இங்குப் 'பின்னிலை' யெனச் சுட்டினேன்.

உள்ளுண் யோகியர் உறுபதம் சிறிதென ஒறுத்தார்
தெள்ளு தீந்தமிழ்க் கம்பன்செய் தென்கவி யின்பால்.

35 ஆடல் வேண்டலர் ஆடின அரங்கிள மகளிர்,
பாடல் வேண்டலர் பண்ணிசைக் கண்ணுளர், வெறிதார்,
சூடல் வேண்டலர் தோகையர் கம்பன் சொல் லமிர்தம்
நாடல் வேண்டினர் நண்ணுறு மகிழ்த்துய்க்க நயந்தே

36 எந்தச் சாதியர் எத்தொழி லாளரெப் பாலார்
சிந்த னைதெளி முதியரோ டிளைஞரா தியபேர்
அந்த மில்லாம் வேற்றுமை யாளரிக் கவியிற்
றந்த மக்குள தத்துவம் கண்டுளம் தழைவார்

37 சமைய வாதியர் தருக்கஞ்செய் தொடக்கெலாம் தவிர்ந்தே
அமைய நின்றுளிர் அலகிலா வருந்தனிப் பொருளை
உமையின் பாகனே டிலக்குமி கேள்வனென் றுன்னு
தவனி நாதனென் பொதுமையிற் காப்பொன்றே யணிந்தான்.

38 ஹோமர் மாகவி யுதித்தவூர் ஞூங்கல அலவீங்
காமென் றேயெழு நகரங்க ளடுத்துப்போர் தொடுத்த
பாம கள்பணி கம்பனை யப்பரி சுரைத்த
பூமியிற்பெரி யாரையார் தம்மொடும் புணர்த்தார்.

39 வீறெ டுத்தகா வியமெனுங் கரும்பின்கான் விசித்துச்
சாறெ டுத்துல கர்க்கொரு காப்பியம் சமைத்தான் ;
சேற டுத்தமண் டேம்போற் றேறலுண் ணாதே
மாறெ டுத்ததம் மதமுறை நூலென் றும் மருண்டார்.

10 சைவம் வைணவம் மென்றிரு சமையத்தின் னிலையிற்
கைவர் தமத நூல்களோ கணக்கில; கவியின்
மெய்வர் தேவிக சிக்குமிக் நூல்விர கறியார்
பொய்வர் தெறிடப் பொதிந்தனர் கவிப்புல னில்லார்.

பரிசோதனத்தொடர்.

சென்ற ஆவணிமாசச் செந்தமிழ்ப்பத்திரிகையில், திருவையாறு, பண்டித. நாராயணசாமி அவர்கள், சேனாவரையர் உரைப்பதிப்பில் நேர்ந்த பிழைகள் சிலவற்றை எடுத்துக்காட்டிப் 'பரிசோதனத்தொடர்' என ஒரு கட்டுரை எழுதி வெளிப்படுத்தினார்கள். அத்தொடையில் காட்டிய திருத்தங்கள் பொருந்தியனவாகவே காணப்படினும் முதற்கட்காட்டிய திருத்தம் ஒன்றும் பழையபடியே இருப்பினும் பொருந்துமென எமது கருத்திற்பட்டமையின், அக்கருத்தையும் ஈண்டுத் தெரிக்கின்றும் பொருந்துமேற்கொள்க.

அத்தொடர், "செயற்கு என்னும் வினையெச்சம் உருபேற்ற தொழிற்பெயரோடொப்புமை யுடைத்தாயினும் உருபும் பெயருமொன்றுகாது பகுப்பப்பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் அதனின் வேறாயினாற்போல என்பது.

இதனுள், 'உருபும் பெயரு மொன்று காது" என்பது வினையெச்சத்திற்கு தருமமன்மையின் ஈண்டு வருதல் பொருத்தமல்லவென்பதே அவர்கள் கருத்து.

மேற்காட்டிய தொடரில், 'பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தல்' எனக்கூறுதலளவே அமையவும், மிகையாகப் 'பகுப்ப' என ஒரு சொற் காணப்படுகின்றது. அதற்குப் 'பிரிப்ப' எனப் பொருள்கூறல் அவசியமன்றாகக் காணப்படுகின்றது. ஏனெனில், ஈண்டு ஒருங்கிசைத்தலும் பக்கிசைத்தலுமே கூறவந்தவராதலின். ஆதலினாலே, 'பகுப்ப' என்பதற்குப் 'பிரிய' என்னுந் தன்வினைப்பொருளே கொள்ளவேண்டியிருக்கின்றது. அங்ஙனம் கொள்ளுங்கால் பகுப்ப என்பது வேறொன்றை அவாவி நிற்கின்றது என்பது அறியப்படுகின்றது. அறியுங்கால் அவ்வவாய் நிலையை 'உருபும் பெயரும் ஒன்றுகாது' என்பது வந்து நிரம்பவேண்டியது என்பது தெற்றெனப் புலப்படும். ஆதலின், 'உருபும் பெயரு மொன்று காது' என்பதும் வேண்டியது என்பதே பெறப்படுகின்றது. அங்ஙனேல், அது வினையெச்சதருமமன்றேவெனின், ஆகாது. அற்றுதல் விளக்குதும்.

உருபேற்ற தொழிற்பெயர்க்கும் வினையெச்சத்திற்குமுள்ள வேறுபாடே இத்தொடராற் சேனாவரையர் கூறலுற்றதாம். இரண்டற்கும் வேறுபாடு கூறுங்கால், உருபேற்ற தொழிற்பெயர், உருபும் பெயரும் ஒன்றாகாது பிளவுபட்டிசைப்பது எனவும், வினையெச்சம் முதனிலையும் ஈறும் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைப்பது என்றும் கூறவேண்டும். அவ்வாறு கூறாது இவ்விருதருமத்தையும், பின்வரும் உவமேயத்திற்கு உவமையாக எடுத்துக்கொள்ளக்கருதியே, இருதருமத்தையும் ஒருதொடரில்வைத்துச் சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபற்றிக் கூறினார் என்பதே எமது கருத்து.

எங்ஙனமெனில், அத்தொடரில், 'உருபும் பெயருமொன்றாகாது பகுப்பப் பிளவுபட் டிசைத்தல்' என்றதுணையும் உருபேற்றதொழிற்பெயரின் தருமமும், அப்பால் வினையெச்சத்தின் தருமமுமாம். உருபேற்ற தொழிற்பெயரின் தருமமாகிய 'உருபும்பெயருமொன்றாகாது பகுப்பப்பிளவுபட் டிசைத்தல்' என்பதை முதலில் வைத்து, அதனை மறைமுகத்தாற் பெறவைக்குமாறு எதிர்மறை ஆகாரவிடைநிலையையும் துவ்விகுதியையுங்கொடுப்பின் வினையெச்ச தருமத்தையுஞ் சேர்த்து 'உருபும்பெயருமொன்றாகாது பகுப்பப்பிளவுபட்டிசையாது ஒன்றுபட் டிசைத்தலான்' எனக் கூறினார் என்க. "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையிற் றம்மின வன்றொட ராகா மன்னே". என்னுஞ் சூத்திரத்துள், சில என்பதை ஆகாது என்பதில் ஆதலோடு முடித்தாற் போல. இதனைச் சங்கரநமச்சிவாய ருரைநோக்கி அறிக. உருபேற்ற தொழிற்பெயர் உருபும்பெயரும் பிளந்திசைக்குமெனவே, வினையெச்ச முதனிலையும் ஈறும் பிளந்திசையாது என்பது அதற்கேற்பக் கொள்ளப்படும். ஒன்றுநின்றே ஏனையதை முடிக்குமாகலின். இனி, (அது) உருபும் பெயரு மொன்றாகாது பகுப்ப (த்தான்) பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் அதனின் வேறாயினாற்போல, எனினுமாம். பகுப்ப—பிளவுபட என்பது பொருள். உருபும் பெயரு மொன்றாகாது மிகைபடலாமெனின், ஆகாது ; மாணாக்கர் உய்த்துணர்ந் திடர்ப்படாது விளங்கக்கூறினார் ஆகலின் 'உருபும் பெயரும் ஒன்றாகாது' என்பது நீக்கப்படின் 'பகுப்ப' என்பதும் நீக்கப்படலாம். இவற்றை நோக்குக.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

ஓரையம்.

நம்மாழ்வார் காலத்தையாராயும்போது, நேரும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் குருபரம்பரையாதிகளில்வரும் அவரைப்பற்றிய சங்க நிகழ்ச்சி சந்தர்ப்பமுமொன்றாகும். அதாவது, ஆழ்வார் பரமபதம் அடைந்ததன்பின்னர் அவரது நற்பெருஞ்சீடராகிய மதுரகவியார் அவர்பொருட்டு விருதுமுதலிய பிடித்துப் பெருமையுடன் சென்றாராகவும், சங்கத்தார் ஆழ்வார்தம் பாடலாகிய திருவாய்மொழி சங்கமேறிய நூலொன்றன்றாகலின், அங்ஙனம் செல்லல்கூடாது என்று தடுத்ததாகவும், பின்னர் ஆழ்வார் மதுரகவியார்க்கு, "கண்ணன்கழலிணை ..."[1] என்ற பாசுரம் எடுத்துக்கொடுத்தருளினாராகவும், அவர் அதனைச் சங்கப்பலகையில் இட, ஆண்டுக்குழுமியிருந்த புலவர்களெல்லாம் பொற்றாமரைக் குளத்தில் விழுந்தனராகவும், அப்பலகை அப்பாசுரமொன்றினையே வந்திநின்றதாகவும், அதுகண்ட சங்கப்புலவரெல்லாம் ஆழ்வாரைப் புகழ்ந்து அவரது திருவாய்மொழியை நனிவியந்து பாராட்டிப் பாடல் பல பாடினாராகவும் என்பது[2]. நடுவுநிலைமை பிறழாத எமது ஆராய்ச்சிக்கு இது இடந்தாவில்லை. இவ்வரலாறு இடைச்செருகல் என்று சில வித்வாம்ஸர் ஒதுக்குகின்றனர். திரு. M. சீனிவாச அய்யங்கார் அவர்கள இதனைக்கொள்ளவில்லை; திரு. டாக்டர். S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் இதனை ஆதரிக்கவில்லை; பண்டிதர். மு. இராகவையங்கார் அவர்களும் இதனைப்போற்றவில்லையென்று தெரிகிறது. பந்தார்க்கா இதனைச் சிறிதேனும் ஒப்பவில்லை.

இது சம்பந்தமான ஆராய்ச்சி எமக்கு நிகழும்போது சில வைணவப்புலவர்களை யாம் கலக்கநேரிட்டது. அன்னோர் தமது பழைய வைதீகப்பிடிவாதக் கொள்கையைமட்டில் எடுத்துக்கூறுகிறார்களேயன்றி ஆராய்ச்சிமுறையிற் கூறவில்லை. ஆனால், அவர்களுள் ஒருவர் கீழ்க் கண்ட அகவற்பாவை எம்மிடம் படித்துக்காட்டி அதற்குப்பொருள் யாதாயிருக்கலாமென்று கேட்டனர். இதன்பொருள் உண்மையில் எமக்குவிளங்கவில்லை; அவர் தமக்கும் விளங்கவில்லையென்றார். இவ்வகவற்பா தோன்றிய வரலாறென்னையென்று யான் கேட்க, அவா சங்கத்தார் தமது விழாவைத் தடுத்தலைக்கண்டு அன்னோர்க்குத் தனபெருமையை அறி

---

[1] திருவாய்மொழி: 10. 5. I. [2] இதனை அரிசமயதீபநூலாசிரியர் கொள்ளவில்லை. பன்னீராயிரப்படி மணிப்பிரவாள குருபரம்பராபிரபாவமும செய்யுட் குருபரம்பரையுத், குருபரமபரைப் புராணமும கூறுகின்றன,

வுறுத்தல்வேண்டி நம்மாழ்வார், மதுரகவியார்க்கு அவரதுயோகநிலையில் இதனை அறிவித்தருள, அவரும் இதனைச் சங்கத்தார்க்குத் தெரிவித்தனர் என்று திருக்குருகூரில் பழையநாள்தொட்டுவந்த வைணவவித்வ பாரம்பரையிலொருவர் வைணவப் புலவரொருவர்க்குச்[1] சொன்னார் என்றார். இது எத்துணை மெய்யோ அது எமது சிற்றறிவிற்கு எட்டவில்லை. இதன் நடை மட்டில் பெரும்பாலும் பழைய சங்கச்செய்யுணடையை ஒட்டியுளது. இதைப்பார்த்தவுடன் எமக்குப் பெருத்த சந்தேகம் உண்டாய்விட்டது. அதனால் எமது நம்மாழ்வார் வரலாற்றின் கால வாராய்ச்சிமேற் செல்லாமல் தடைபடுகின்றது.

ஆதலாலே, இவ்வாசிரியப்பாவின் வரலாறு, இது எந்தநூலில் உள்ளது, இதனைப்பற்றிய விஷயம், இதனை ஆழ்வார் செய்துகொடுத்தாரென்பது மெய்யா பொய்யா, இதன்பொருள் ஆதியவற்றைப் பத்திரிகாசிரியரேனும், அல்லது பிறசெந்தமிழ் ஆராய்ச்சிப் புலவர்களேனும் தயவுசெய்து ஆராய்ந்து எமக்குக் கடிதமூலமேனும் இப்பத்திரிகை மூலமேனும் தெரிவித்து எமதையத்தைக்களையவேண்டுமாய்ப் பெரிதும் வணங்கிக் கேட்டுக்கொள்கிறோம்:—

ஸ்ரீ:

“ அண்ட கோளத் தாரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரொழி லொருமை
ஈருயிர் மருங்கி னரியர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணல் பரப்பி
வேரும் வித்து மின்றித் தானே
தன்னிலை யறியாத் தொன்மிகு பெருமரம்,—
மூவழி முப்பழம் முறைமுறை தருதலின்
ஒன்றுண் டொண்சுவை தருவது ; மற்றது
கல்வி லெழுந்து கடவி லழுந்தி
அறுகாற் குரவ னீரற விளக்கு
நிரைபொழிற் குப்பை தறுகட் பொன்றுவித்
தறுகோட் டாமா விளக்கு நாடன் ;
அவனே தலையிலி அவன்மகள் முலையிலி
தானு மீனு ளீனவும் படாஅள் ;
எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள் ;
அவளிவ ளுவளென் றறித
லுவளறு காட்சிப் புலவரது கடனே ! ”
(இது நம்மாழ்வார் சங்கத்தார்க்கு அருளிச்செய்த அகவல்.)

இராமகிருஷ்ணசடகோபதாஸன்.

---

[1] புவனகிரி : பிரபன்னவித்வான்—ஸ்ரீமான் அழகியமணவாள இராமாநுஜ ஏகாங்கி ஸ்வாமிகள்.

ஸ்ரீ:

மதிப்புரை.

1. தமிழ்விடுதூது:— இது மதுரைச் சொக்கநாதரைத் தலைவராகக்கொண்ட இனியதொரு செந்தமிழ்ப் பிரபந்தம். அக்கடவுளிடம் காதலுற்ற தலைவி தமிழையே அவர்பால் தூதுவிட்டதாகக் கூறுதல் இதில் மிக அருமைவாய்ப்ப அமைந்துள்ளது. சொற்பொருள் வளங்கள் நிறைந்து கற்போர் நெஞ்சம் காமுறச்செய்யும் இயல்பினால், இச்சிறுநூல் இவ்வகையில் தலைசிறந்த தொன்றாய் விளங்குகிறது. இதனை இயற்றிய பெரியார் இன்னாரென்று தெரியவில்லை. ஆயினும் அவரது தமிழ்ப்புலமையும் சிவபக்தியும் அளவிறந்தனவென்று அறியக்கிடக்கின்றன.

மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ. வே. சாமிநாத ஐயரவர்களால் அச்சிடப்பெற்ற பெருமையும் இவ்வரிய தமிழ்நூலுக்கு வாய்த்துளது. பதினைந்துபக்கங்களில் விரிந்ததொரு முகவுரையும், குறிப்புரையும், ஆராய்ச்சிக்குறிப்பும், சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ்நூற் பரப்பினுள், தூதென்னும் பிரபந்தத்தைக்குறித்து அறிதற்குரிய "எல்லாப் பொருளும் இதன்பாலுள" என்றல் 'இதன் முகவுரைக்கு மிகையாகாது. குறிப்புரையின் அருமையும் சொல்லளவின் அடங்குவதன்று. ஐம்பதின்மேற்பட்ட அருந்தமிழ் நூல்கள் இதில் மேற்கோளாக ஆட்சிபெறுகின்றன. இறுதியாகவுள்ள ஆராய்ச்சிக் குறிப்பும் இன்றியமையாததேயாம். இவை நிற்க.

திருப்பனந்தாள் காசிமடலாயத் தலைவர்களும் அருங்கலை விநோதர்களுமாக விளங்கும் கௌரவம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ. காசிவாசி, ஸ்வாமிநாதஸ்வாமிகளவர்கள் இக்காலம் தமிழ் வளர்ச்சி குறித்துச் செய்துவரும் முயற்சிகள்தாம் மிகப்பல. அவற்றுளொன்றாக அவர்கள் இதனை அச்சிடுதற்குப் பொருளுதவி புரிந்தது இந்நூலுக்கு மற்றொரு வகையான் ஏற்றமளிக்கின்றது. இங்ஙனம் மும்மடியாகச் சிறப்புற்று

விளங்கும் இதனைப் பயில்வோரனைவரும் ஸ்ரீசோமசுந்தரப் பெருமானது திருவருட்பேற்றுக்கு இலக்காவரென்பது திண்ணம். விலை அணா 5.
விலாசம்:— மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் தியாகராஜவிலாசம், திருவேட்டீசுரன்பேட்டை, சென்னை.

2. நாமதீபநிகண்டு :—இஃது ஒருபொருட் பல்பெயர்த் தொகுதியைக் கூறும அரியதொரு நிகண்டு நூலாம். "பற்பல நிகண்டிற் பண்டிதர்கள் சொன்னபொருள், எல்லாம் இனிதாய் எளிதுணர்" வெண்பாயாப்பினில் எண்ணூறு செய்யுட்களானியன்று விளங்கும் இது தமிழ் மொழிக்கண் பிறநிகண்டுகட்கெல்லாம் பிற்பட்டகாலத்தது. இதில் ஏறத்தாழப் பன்னீராயிரம் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

இதனை இயற்றிய ஆசிரியரது பெயர்முதலிய வரலாறு நன்கு விளங்கவில்லை. இவர் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்தவரென்பதும், இவர் தந்தையார் 'பொதிகை நிகண்டு' இயற்றியவரென்பதும், தொகை நிகண்டு எனப்பெயரிய வேறு நூலொன்று இவர்தாமே இயற்றினரென்பதும், ஐயமின்றி அறியற்பாலன. இவர்காலம் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்கட்குமுன் என்றும், இவர் தந்தையார் சாமிகவிராசரென்றும், சிவசுப்பிரமணியன் என்பது இவரியற்பெயரென்றும் ஒருவாற்றான் உய்த்துணரப்படுகின்றன.

இதற்குப் பழையவுரையொன்று உள்ளதாயினும், அது செப்பமுடையதல்லாமை நோக்கி, இதன்பதிப்பாளர் ஸ்ரீமாந் S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L., அவர்கள் தாமே புதியதோர் உரையினை எழுதி, இன்றியமையாத குறிப்புக்களோடும் முன்னுரையுடனும், இதனைச்செவ்விதின் அச்சிட்டிருக்கின்றனர். பிள்ளையவர்களின் ஊக்கமும் உழைப்பும் பெருமதிப்போடு பேணுதற்குரியன. மற்றுள்ள நிகண்டுகளையும் அவர்கள் "தமிழகராதியின் ஆதாரநூற்றொகுதி" என்ற மகுடத்துடன் இதுபோலவே வெளியிடக்கருதியிருப்பது சாலப்பயன் தருவதாகும்.

இதன் விலை ரூ 2. விலாசம்:— "Editor Tamil Lexicon, Limbdi Gardens, Royapetta, Madras".

3. ஸ்ரீசடகோபதிவ்ய சரிதம்:— இது நம்மாழ்வாரது வைபவங்களை ஏறத்தாழ ஆயிரத்திருநூறு செய்யுட்களால் அழகாகவிரித்துரைப்பது; எல்லோர்க்கும் எளிதிற் பொருள்விளங்குமாறு தெள்ளிய தீந்தமிழ்க் கவிகளால் இயன்றுள்ளது. இதன் ஆசிரியர், ஆழ்வார்திருநகரியென்னும் திருக்குருகூரில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ. வே. தேவராஜ ஐயங்கார் ஸ்வாமி என்னும் தேவேச பாரதிகளாவர். ஸ்ரீசடகோபருடைய அவதாரமும், அவருக்கு நூற்றெட்டுத்திருப்பதியெம்பெருமான்களும் திருப்புளியின்கீழ் ஸேவைஸாதித்ததும், திராவிடவேதமாகிய திருவாய்மொழியை ஆழ்வார் அருளிச்செய்ததும், ஸ்ரீமதுரகவிகள் அதனைப் பட்டோலைக்கொண்டதும், பின்புள்ளாரும் ஸேவித்துஉய்ய அவர் அர்ச்சாரூபியாய் எழுந்தருளிய விவரமும், அவ்வுருவுடன் கூடி அவர் காலக்கிரமத்தில் ஸ்ரீநாதமுனிகளுக்கு நாலாயிரமுரைத்ததும் முதலான வரலாறுகளெல்லாம் முன்னோர் மொழியின் வழியே இதில் நன்கு விவரிக்கப்பெற்றுள்ளன.

இந்நூல், இதன் ஆசிரியருடைய மாணாக்கரான ஸ்ரீ பெரியன் தேசிகமையங்கார் ஸ்வாமியின் குமாரர் வெ. நா. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் நன்முயற்சியால் இப்பொழுது வெளிவருவதாயிற்று. தமது குடும்பத்தின் தகுதிக்கேற்ப ஸ்ரீநிவாஸ ஐயங்காரிடம் அமைந்த தமிழபிமானமும் வைணவசமயப்பற்றும் பாராட்டற்பாலன. இதுபோலவே இவர் இன்னும் பல நூல்களைச் செவ்வையாக அச்சிடுதற்கு அறிவும் ஆற்றலும் வளர்ந்தோங்குமாறு எம்பெருமான் திருவருள்புரிக. விலை ரூ 2–6–0 விலாசம்:—'பெரியன், வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார், திருஞானமுத்திரைப் பிரசுராலயம், ஆழ்வார்திருநகரி.'

4. தமிழ்ப்பேரகராதி:—சென்னை சர்வகலாசங்கத்தின் ஆதரவில் அச்சிடப்பெறும் இவ்வகராதியின் தொகுதி 4 பகுதி 2. வெளிவந்துள்ளது. இதில் 'தொப்பைக்கூத்தாடி' என்பதுமுதல் 'நியமித்தல்' என்பதிறுதியாகவுள்ள சொற்களின் பொருள் வழக்கம்போல் மிகத்

திருத்தமாகவும் தெளிவாகவும் தக்கசான்றுகளுடனும் விளக்கப் பட்டிருக்கிறது. விலை ரூ. 2. விலாசம்:—C. குமாரசாமி நாயுடு சன்ஸ், ஜார்ஜ் டவுன், சென்னை.

5. பிரசோற்பத்தி வருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—இஃது யாழ்ப்பாணம் சோதிட பரிபாலன மடத்தின் வெளியீடாகும். கொக்குவில் இரகுநாதையரின் தத்தபுத்திரர் சிவராமலிங்க ஐயரவர்களால் நூன் முறையினின்று சிறிதும் வழுவாமற் கணிக்கப்பெற்ற இது எல்லோரும் எளிதாக சுபாசுபங்களையறிந்து காரியஞ்செய்தற்கு ஏற்றதொருகருவியாய் அமைந்துள்ளது. இதில் ஒவ்வொரு தினத்திற்கும் திதிநக்ஷத்திரங்களின் நாழிகையும் விநாடியுங்குறிப்பிட்டிருத்தலேயன்றி, மணி நிமிஷங்களும் வரையறுத்து எழுதப்பட்டுள்ளன. அவ் வந்நாட்களின் சிராத்ததிதி இன்னதென்பதையும் இது தெளிவாக அறிவிக்கின்றது. மற்றும் இப்பஞ்சாங்கத்தால் தெரிதற்குரிய விஷயங்கள் மிகப் பல. விலை அணா 4, தபாற்செலவுடன் 5. விலாசம்:—இ. சி. இரகுநாதையர், சோதிடபரிபாலனமடம், கொக்குவில் (இலங்கை).